Registered as a News paper | பக்கங்கள் - 08 | விலை - ரூபா 07

# தமிழ் அலை

Tamilalai
தினசரி

அதிநவீன தொழில்நுட்பத்தில்
உங்கள் அச்சுப்பதிப்புக்களை
(கறுப்புவெள்ளை, கலர்)
விரைவாக செய்து கொள்ள
நீங்கள் தெரிவுசெய்ய வேண்டிய
ஒரே இடம்:
நித்தி பதிப்பகம்
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை
தொலைபேசி. 065. 2226110

அலை - 01 | 05-01-2004 திங்கட்கிழமை | ஒலி - 91

## மட்டு.மாவட்ட பொங்குதமிழ் தொடர்பாக இன்று விசேட கலந்துரையாடல்

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெறவிருக்கும் பொங்கு தமிழ் நிகழ்வு சம்பந்தமான கலந்துரையாடலொன்று இன்று பி.ப. 4.00 மணிக்கு மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெறுகின்றது.

இக்கலந்துரையாடலில் கிழக்குப் பல்கலைக்கழக சமூகம், உயர் நிலைக்கல்வி நிறுவனங்களான ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கல்வியல் கல்லூரி, தாதியர் பயிற்சிக் கலாசாலை, தொழிநுட்பக் கல்லூரி, தனியார் உயர்கல்வி நிறுவனங்கள், மற்றும் இந்து ஆலையங்களின் ஒன்றியம், சாரணர் ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வித்திணைக்களம், வர்த்தக சங்கம், அதிபர் சங்கம், ஆசிரியர் சங்கம் என்பன இச்சந்திப்பில் கலந்து கொள்ளவுள்ளதாக கிழக்குப் பல்கலைக்கழகத்தை சேர்ந்த பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## போலி துப்பாக்கியுடன் கொள்ளையில் ஈடுபட்ட நபர் மட்டு. நகரில் கைது!

(நமது நிருபர்)

இயக்கமென்ற பெயரைப் பயன்படுத்தி கொள்ளை முயற்சியில் ஈடுபட்ட நபர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு பதில் நீதவான் டி.சி.சின்னையா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது சந்தேக நபரை 13ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர் கடந்த 2ம் திகதி இரவு வீடொன்றிற்குள் புகுந்து போலித் துப்பாக்கி ஒன்றைக்காட்டி வீட்டில் இருந்தவர்களை அச்சுறுத்தி கொள்ளை முயற்சியில் ஈடுபட்டமை விசாணைகளில் இருந்து தெரிய வந்ததாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபரை விசாரணை செய்த போது பல்வேறு கொள்ளைகளுடனும், கொலைகளுடனும் தொடர்புடைய நபர் ஒருவர் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளதாகவும், அந்த நபரை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக்வும், பொலிசார் மேலும் தெரிவிக்கின்றனர்.

# அடிபணிய அமெரிக்கா அழுத்தம்

# பொ.ஐ.முன்னணி கட்சி கண்டனம்!

(நமது நிருபர்)

**அமெரிக்கா மூலம் அழுத் தங்களைப் பிரயோகித்து பொதுஜன ஐக்கிய முன்னணியையும், ஜனாதிபதியையும் அடிபணிய வைக்கும் முயற்சியில் பிரதமர் ரணில் விக்கிர·மசிங்கா ஈடுபட்டுவருவதாக பொதுஜன ஐக்கிய முன்னணி வட் டாரங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.**

ஜனாதிபதி மூன்று அமைச்சுப் பொறுப்புக்களை அரசிடமிருந்து மீளப்பெற்றுக் கொண்டதையடுத்து அரசியல் பிணக்குகளை தீர்க்க முடியாதுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வெள்ளை மாளிகையின் உதவியை நாடியிருப்பதாக இந்தக் கட்சிப் பிரதிநிதிகள் ரணில் மீது குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

அமெரிக்க செயலாளர் கொலின் பவல் கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவுக்கும் தனித்தனியாக முத்திரையிடப்பட்ட இரு கடிதங்களை அமெரிக்க தூதுவர் ஊடாக அனுப்பியிருந்தார்.

இக்கடிதங்களை ஜனாதிபதி செலயகத்திடமும், பிரதமர் அலுவலகத்திடமும் அமெரிக்கத் தூதுவர் ஊடாக கையளிக்கப்பட்டுள்ளது.

இரு தலைவர்களும் இணக்கப்பாட்டுக்கு வந்து விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## மட்.பொங்குதமிழ் தொடர்பாக விழிப்பூட்டும் ஊர்வலம்

(எம்.யுவராஜ்)

இம்மாத இறுதியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவிருக்கும் பொங்குதமிழ் நிகழ்வு பற்றிய விழிப்புணர்வூட்டும் ஊர்வலம் ஒன்று எதிர்வரும் 6ந் திகதி நடைபெறவுள்ளது.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் இப்பிரசார ஊர்வலம் மட்டக்களப்பு மாவட்டம் முழுவதும் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிக்கல்களைத் தீர்த்து வைத்து பிரச்சினைக்கு தீர்வு காண்போம்

### சார்க் மாநாட்டில் ஜனாதிபதி

(நமது நிருபர்)

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயம் பல்வேறு சிக்கல் நிறைந்து காணப்படுவதாகவும், இவற்றை ஆராய்ந்து தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்று சார்க் மாநாட் டில் தெரிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத் நகரில் ஜின்னா மண்டபத்தில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் சார்க் மாநாடு நேற்று ஆரம்பமானது.

இம்மாநாட்டில் கலந்து

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

## களுவாஞ்சிகுடி டிப்போ ஊழியர்கள் நேற்று போராட்டத்தை கைவிட்டனர்

(எஸ்.ரவீந்திரன்)

களுவாஞ்சிகுடி பஸ் டிப்போ ஊழியர்கள் கடந்த மூன்று நாட்களாக நடத்தி வந்த வேலை நிறுத்தப் போராட்டம் நேற்று மாலை முடிவுக்கு வந்தது.

நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி தலைவர் வி. இராமநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.கிருஸ்ண பிள்ளை ஆகியோர் நேற்று பிற்பகல் களுவாஞ்சிகுடி பஸ் டிப்போவுக்கு சென்று ஊழியர்களுடன் நடத்திய பேச்சுக்களையடுத்து ஊழியர்கள் போராட்டத்தை கைவிடத் தீர்மானி

(தொடர்ச்சி 8ம் பக்கம்)



நியூ ஈஸ்டன் பஸ் கம்பனியின் களுவாஞ்சிகுடிசாலை ஊழியர்கள் கடந்த 3 தினங்களாக டிப்போவுக்கு முன்பாக வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போது பிடிக்கப்பட்ட படம் (படம் வேதநாயகம்)

## வாகரை, பட்டிப்பளையில் தொழிற் பயிற்சி நிலையங்கள்

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

மூன்றாம் நிலைக்கல்வி, பயிற்சி அமைச்சின் இலங்கை·தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் கிராமிய தொழில் பயிற்சி நெறிகளுக்கான இரண்டு நிலையங்கள் மட்டக்களப்பு மாவட் டத்தின் விடுவிக்கப்படாத பிரதேசங்களில் திறக்கப்படவுள்ளன.

வாகரை மற்றும் பட்டிப்பளை ஆகிய இடங்களில் இப்பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கென இருபது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தொழில் பயிற்சி அதிகார சபையின் மட்டக்களப்பு - அம்பாறை பிராந்திய உதவிப் பணிப்பாளர் எம்.எம். அமீர் தெரிவித்தார்.

புதிதாக அமைக்கப்படும் இந்நிலையங்களில் தச்சுவேலை, உலோக ஒட்டு மற்றும் மேசன் ஆகிய தொழில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர், ஓட்டமாவடி, வந்தாறுமூலை, ஆரையம்பதி மற்றும் களுவாஞ்சிகுடி ஆகிய பிரதேசங்களில் தொழில் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போடியார் பொறி வெடி

இனிமேல் இந்தப் பருப்பு வேகாது

அமைச்சர் ஹக்கீம்



வேகாத பருப்புக்கு நல்ல மருந்து அம்மியில வைத்து தட்டிப் போட்டு அவிக்கிறதானே....

தமிழ்அலை
Tamilalai
பிரதான வீதி
கொக்கட்டிச்சோலை.
தொலைபேசி:- 065. 2226110
தொலைநகல:- 065. 2226110
மின்னஞ்சல்:- tamilalai32@yahoo.com.
இணையத்தளம்:- www.tamilalai.net

05.01.2004

## தமிழ் நெஞ்சை விட்டு நீங்காத மாமனிதன்

சிங்கள இனவாத அரசுகளின் கொடூரங்களுக்குள் தமிழினம் சிக்குண்டு அல்லலுற்ற போது மூச்சு விடக்கூட தமிழனுக்கு முடியாத ஒரு சூழ் நிலையில் சிங்களப் பேரினவாத அரசு களின் இனவெறித் தனத்தை உலகறியச் செய்த உத்தமர் மாமனிதர் குமார் பொன்னம்பலம் மறைந்து மூன்றாண்டுகள் நினைவு கூருகிறோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நகர்ந்த போது அதனை ஜீரணிக்க முடியாத இனவாத வெறியாளர்கள் தமிழினத்தை கொன்றழித்தனர். ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். காணாமல் போயினர் வடக்கிலும் கிழக்கிலும் விமானக்குண்டு வீச்சுக்கள் இவ்வாறு தமிழினம் அவஸ்தைப்பட்ட போது கொழும்பு நகரில் சிங்களத்தின் குகைக்குள் இருந்து குரல் கொடுத்தார் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

சிங்களப் பாராளுமன்றத்திலும் சரி சர்வதேச நாடுகளிலும் சரி தமிழினத்துக்கு எதிரான அடக்குமுறை களை எதிர்த்தும் தமிழினத்தின் விடுதலைக்குப் போராடும் தமிழீழ விடுதலைப்புலிகளின் புனிதமான போராட்டத்தின் நியாயத்தன்மையையும் வெளிக் காட்டியதன் விளைவு மாமனிதர் மீது சிங்கள இனவாதிகள் புலி முத்திரை குத்தினர்.

எதற்கும் அஞ்சா நெஞ்சம் கொண்ட தமிழ் மகனாகத் தொடர்ந்து தமது பணியினை செய்து வந்தார். சிங்களப் படைகளால் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கூடங்களில் வாடிய போது அவர்களுக்கு ஆதரவாக நீதிமன்றுகளில் சட்டவாதப் பணியினைச் செய்தமை இன்றும் தமிழ் உலகம் மறந்து விடவில்லை.

இத்தகைய அரும்பெரிய குணங்கள் கொண்ட இந்த உத்தமனை குறி வைத்தனர் சந்திரிகா ஆட்சியாளர்கள். அந்தக் குறிதப்பவில்லை. 5.1.2000 ஆம்ஆண்டு அவர் உயிர் இந்த உலகத்தை விட்டுப் பிரிகிறது.

அவரது சேவை அவரது அகிம்சை வழிப் போராட்ட இடைவெளிகள் இன்னும் நிரப்பப்பட வில்லை. அவரது மறைவு சிங்களப் பேரினவாதிகளை குதூகலிக்கச் செய்திருக்கலாம். ஆனால் ஈழத்தமிழினத்தின் நெஞ்சங்களில் மாமனிதனாக குமார் நிறைந்திருப்பார்.

### இன்றைய நாள்

சூரி ~ காலை 06:3± மாலை 5:58
ராகு ~ மு.ப 07:56 மு.ப 09:22
எம ~ மு.ப 10:48 ~ந.ப . 12:14
தெய்.மூகூ ~ மு.ப.11:17 ந.ப 12:14
நக்ஷ ~ தியா மு.ப.05.59 மு.இ.07:44
திதி ~ மாலை 6.00 வரை திரயோதசி
நக்ஷ மு.ப 11 : 48 ~ வரை ரோகினி
சு.யோகம் ~ முழுவதும் அமிர்தம்
சிராத்தம் ~ மார்கழி மாத பூ.திரயோதசி
பிறந்ததின வழிபாடு:~ ......................

# தமிழினத்தின் விடுதலைக்காக உலகறியக் குரல் கொடுத்த மாமனிதன்

செல்வச் சிறப்பும், மிகுந்த கௌரவமும் , சீர்கல்வியும், அதி உயர்ந்த வரலாறும், கொண்ட ஜீ.ஜீ.பொன்னம்பலம் என்ற பெரும் தலைவரின் பெருங்குடியில் 12.08.1938ல் பிறந்தவர் குமார் பொன்னம்பலம்.

இவர் இலங்கையில் றோயல் கல்லூரியில்தனது ஆரம்பக் கல்வியைத் தொடங்கி லண்டன் பல்கலைக்கழகத்திலும், இங்கிலாந்திலுள்ள புகழ் பெற்ற கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்திலும், கல்வி கற்று அதன் பின் இங்கிலாந்தில் பரீஸ்டர் பட்டம் பெற்றவராவார்.

தனது தந்தையும், தமிழ் மக்களின் முதிர்ந்த தலைவருமாகிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களின் மறைவின் பின் தமிழ் மக்களின் மூத்த கட்சியான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியின்பொதுச் செயலாளராக பணியாற்றி அக்கட்சியின் உயர்வுக்குத் தன்னையே அர்ப்பணித்தவர் குமார் பொன்னம்பலம்.

இவரின் வெளிப்படையான பேச்சுக்களும், சட்டவாதங்களும், மறைக்கப்பட்ட சத்துராதித்தனங்களை வெளியே கொண்டு வரும் பாணியும், சிங்கள ஏகாதிபத்தியங்களுக்கு சிம்ம சொர்ப்பனமாக இருந்தது.

குமார் பொன்னம்பலம் அவர்களால் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை, திருமலை மாவட்டத்திலுள்ள குமரபுரத்தில் 26 அப்பாவித் தமிழர்களின் படுகொலைகள், திருமலைச் சிறைச்சாலையில் 5 தமிழர்கள் கொல்லப்பட்டமை, பொல்கொட வாவியில் மிதந்த 21 தமிழ் மக்களின் சடலங்களின் உண்மைக் காரணங்களையும், செம்மணியில் கிரிசாந்தி குமாரசுவாமி மற்றும் ரஞ்சனி வேலாயுத பிள்ளை போன்றவர்களின் பாலியல் வல்லுறவுச் சம்பவங்களையும், கொலைகளையும் வெளிக்கொண்டு வந்து அதற்காக வாதாடி அரச படைகளின் அடாவடித்தனங்களையும், அரசாங்கங்களின் மூடிமறைக்கும் முகத்திரையையும் தனது வாதத்திறமையாலும், துணிவாலும்,தகுந்த அணுகு முறையாலும் வெளி உலகுக்கு வெளிக்காட்டி நீதி கேட்ட அஞ்சாநெஞ்சன் குமார் பொன்னம்பலம்.

தமிழர்களின் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசுகளால் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட்டமும், அவசரகாலச் சட்டமும் தமிழ் மக்களை வேட்டையாடிய ஆரம்ப கால கட்டத்தில் உற்சாகத்துடன் ஈடு



பட்டு வந்த மூத்த தலைமுறை வக்கீல்கள் 1983க்குப் பின் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை கைவிட்டு இந்தியாவுக்கு மூட்டை முடிச்சுகளோடு வெளியேறி விட்டார்கள்.

இந்த காலகட்டத்தில் தான் குமார் சிலிர்த்தெழுந்து தியாக உணர்வுடனும் அரசியல் பற்றுதியுடனும், எந்தவிதப் பொருளாதார, எதிர்பார்ப்புமின்றி தனது சேவையை தமிழ் மக்களுக்கு விரிவாக்கத் தொடங்கினார். இதனால் தென்னிலங்கைச் சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் இருந்த இளைஞர்கள், யுவதிகளின் இதயங்களில் நமக்கு விடுதலை கிடைக்கும் என்ற நம்பிக்கையின் ஒளிக்கீற்று உதயமாயிற்று.

மேற்படி காரணங்களால் இலங்கை அரசின் வெறுப்பு இவர் பக்கம் அதன் பார்வையை திருப்பியது. இந்திய அரசால் நாடுகடத்தப்பட்ட எரிக் சௌந்தரநாயகம் அவர்களின் பிரச்சினை குமார் அவர்களாலேயே வெளிக் கொண்டு வரப்பட்டது. இதனால் இந்தியப் புலனாய்வுத் துறையின் வெறுப்புக் கண்களால் இவர் எதிரியாகக் கணிக்கப்பட்டார்.

இதே வேளை மறைந்த நீலன் திருச்செல்வத்துக்கு அமெரிக்க அரசும் மனித உரிமை உலக அமைப்பும் தங்கள் அனுதாபத்தைத் தெரிவித்திருந்தன. ஆனால் குமார் படுகொலை செய்யப்பட்ட போது இவை மௌனித்தன. இது அமெரிக்காவின் வெறுப்புக்குள்ளானவர் குமார் பொன்னம்பலம் என்பதை

**இரா. தவராஜா.**

வெளிப்படையாக எடுத்துக் காட்டியது.

ஈழத்தமிழர்களின் உரிமைக்காகப் போராடி இலங்கை, இந்தியா, அமரிக்கா அரசுகளின் வெறுப்புக்குள்ளான ஒரே தலைவர் பொன்னம்பலமாகும். எந்த நாடுகள் எதிர்த்து நின்றாலும் தன் கொள்கையில் திடகாத்திரமாக ஓர்மத்துடன் பாடுபட்ட இத்தலைவன் ஈழத் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்து நிற்கிறார்.

தமிழ் மக்களுக்கு ஆதரவாக சிங்கள அரசுகளின் இன அழிப்புக்கு எதிராக குரல் கொடுத்த மாமனிதனுக்கு சந்திரிகா அரசின் சூழ்ச்சிக்காரர்களால் கடந்த 5.1.2000ம் ஆண்டு அவரது கொழும்பு இல்லத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டார்.

இன்று இவர் இருந்திருந்தால் தேசியத்தலைமைக்கு பக்கபலமாக நின்று மேலும் பணியாற்றி இருப்பார்.

# தாயக விடுதலைப் போரில் வீதி நாடகங்களின் பங்கு

### நாடக நெறியாளர் பாலா மாஸ்டருடன் ஒரு நேர்காணல்

எமது தாயக விடுதலைப் போராட்டத்திற்கு கலை இலக்கியப் பங்களிப்புகள் ஒரு உந்து சக்தியாக விளங்குகின்றன. போராட்டத்தை, போராட்ட வரலாற்றினை சித்தரிப்பதோடு மட்டுமல்லாமல் போராட்டத்தை வளர்த்துச் செல்வதற்கும் தேவையான பங்களிப்பினை கலை இலக்கியங்கள் செய்து வருகின்றன. இந்த வகையில் 1980களின் ஆரம்பத்தில் கவிதை ஒரு பாரிய பாத்திரத்தை எடுத்திருந்தது. போராட்ட அமைப்புகளின் பிரசுரங்களில் மட்டுமல்லாது, துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றிலும் கவிதைகளே அதிகம் இடம்பெற்றிருந்தன. உண்மையில் சொல்லப் போனால் போராளிகளின் இன்னுமொரு ஆயுதமாக 'கவிதை' விளங்கியது.

காலப்போக்கில் கவிதை சுற்று வேகம் குறைந்த காரணத்தினாலோ என்னவோ நாடகம் கவிதையின் முன்னைய பாத்திரத்தைப் பெற்று எழுச்சிபெறத் தொடங்கியது. குறிப்பாக தெருவெளி அல்லது வீதி நாடகம் என்கிற வடிவம். கிராமங்களிலுள்ள மூலை முடுக்குகள் எல்லாம் மக்களைத் தேடிச் சென்றது. மக்களோடும், மக்களின் தினசரி வாழ்வினோடும் அது ஒன்றிக் கலந்தது.

1990ம் ஆண்டிலிருந்து இன்று வரை இத்தெருவெளி அல்லது வீதி நாடகத்தின் தளத்தில் நின்று இயங்குபவர்களான நாடக இயக்குனர்களில் பாலாமாஸ்ரரும் முக்கியமானவர். இந்நாடக முறைமையினை தனது நாடக அனுபவங்களினுடாக இங்கு பகிர்ந்து கொள்கிறார்.

கேள்வி:- *நாடகம் என்ற வகையில் வீதி நாடகம் என்ற தளத்தை நீங்கள் தெரிவு செய்வதற்கான காரணம் என்ன?*

பதில:- நாடகத்தின் வடிவத்தை சூழல் தான் தீர்மானிக்கின்றது. 'தெருவெளி அரங்கு" அல்லது 'வீதி நாடகம்" என்கிறஇந்த வடிவத்தை எம்மீது திணிக்கப்பட்ட யுத்தச் சூழலே தீர்மானம் செய்தது. யுத்த சூழலில் நாடகங்களினுடாக பல செய்திகளைச் சொல்ல வேண்டியிருந்தது. பிரமாண்டமான அரங்குகளை அமைக்க எமக்கு வசதிகள் இல்லை. மக்களை நாம் அவர்களின் இடத்திற்கே தேடிப் போக வேண்டிய தேவை இருந்தது. மிகவும் பின் தங்கிய கிராமங்களுக்கெல்லாம் செய்தி ஊடகமாக இயங்க வேறொரு வாய்ப்பும் இருக்கவில்லை. வீதி நாடகமே அவ்வேலையைச் செய்தது. மிகவும் இலகு படுத்தப்பட்ட வீதி நாடக வடிவமே மக்களை அணுகுவதற்கான ஒரு அமைப்பாக இருந்தது. ஆக எமது சூழல் தான் இந்த நாடக வடிவத் தை எமக்குத் தந்தது எனலாம்.

கேள்வி:- *இவ்வாறான நாடக முறைமை தமிழ்ப்பிரதேசங்களில் எப்போது தோற்றம் பெற்றது?*

பதில்:- ஆரம்ப காலங்களில், குறிப்பாக அறுபதுகளில் வீதி நாடகங்கள் இருக்க வில்லை என்று தான் நான் நினைக்கின்றேன். நானறிந்த வகையில் யாழ்ப்பாணத்தில் முதலில் நிகழ்த்தப்பட்ட வீதி நாடகம் 'மாயமான்' என்பதாகும். திரு .சிதம்பரநாதன் தயாரித்த நாடகம் இது. இந்நாடகம் விடுதலைப் போராட்ட சூழலிலேயே வந்ததெனலாம். 1984ல் இந்நாடகம் நிகழ்த்தப்பட்டது. நான் தெருவில் பார்த்த முதல் நாடகம் இதுதான். பின்னர், நிலாந்தனால் எழுதப்பட்ட 'விடுதலைத்தேர்' என்ற ஒரு நாடகம். இதன் பின்னர் கிராமிய உழைப்பாளர் சங்கத்தினூடாக நாங்கள் தயாரித்த நாடகம். இதற்கு முதல் வி.எம்.சிவராஜாவால் தயாரிக்கப்பட்ட 'கசிப்பு' என்றொரு நாடகம். இவையெல்லாமே விடுதலைப்போராட்டம் நிகழ்ந்த சூழலிலேயே வெளிவரத்தொடங்கின.

கேள்வி:- *கூத்துக்களிலிருந்து தெருவெளி நாடகத்திற்கான அம்சங்கள் தோன்றினவா அல்லது மேடை நாடகத்திலிருந்து தோன்றினவா?*

பதில்:- கூத்துக்கள் தெரு வெளி நாடகமாக நடந்ததில்லை. கூத்துக்கள் வட்டக்களரி என்கின்ற அரங்கிலேயே நடாத்தப்படுகின்றது. அது மண்போட்டு உயர்த்தப்பட்ட ஒரு மேடை, சோடனைகள் செய்யப்பட்டிருக்கும். அதிலேயே கூத்துக்கள் நடைபெறும். வீதி நாடகம் அவ்வாறில்லை. அது தெருவிலேயே நடைபெறும் அதே நேரம் அரங்கிலும் அதனை நடாத்தலாம். எந்தச் சூழலுற்கும் ஏற்ற வகையில் இசைவாக்கமுற்ற வடிவமாகவே வீதி நாடகங்கள் உள்ளன.

கேள்வி:- *வன்னிப்பிரதேசங்களிலேயே வீதி நாடகங்கள் அதிகம் நிகழ்த்தப்பட்டுள்ளன. சாதாரண மக்கள் மத்தியில் இந்நாடகங்களுக்கு ஆதர விருக்கின்றதா?*

பதில்:- எங்களது வீதி நாடகக் கலைஞர்கள் உண்மையில் சொல்லப்போனால் போராளிகள் போன்றே செயற்பட்டு வருகின்றனர். சைக்கிள்களிலேயே அவர்கள் பயணம் செய்கின்றனர். மரங்களின் கீழேயே சில சமயங்களில் துயில வேண்டிய வரும். உதாரணத்திற்கு புதுக்குடியிருப்பில் இருந்து முழங்காவில் எனும் ஊருக்கு நாடகம் போடப் போவதானால் எங்கள் குழுவிலுள்ள ஆண்களும் பெண்களுமான கலைஞர்கள் சுமார் 150 கி.மீ தூரத்திற்கு சைக்கிள்களிலேயே பயணம் செய்கின்றனர். பல சமயங்களில் வறுமையும், நோயும் மேலதிக துன்பத்தைத் தந்து கொண்டிருந்த வேளைகளில் எங்கள் கலைஞர்களும் அவற்றிற்கெல்லாம் முகம் கொடுத்து செயற்பட்டிருக்கின்றனர்.

மலேரியா காய்ச்சலில் நடுங்கிக் கொண்டே, அதற்கான குளிகைகளைப் போட்டுப் போட்டு நாடகத்தில் பங்காற்றியிருக்கின்றார்கள். எங்கள் நாடக இயக்கம் எந்த வொரு கலைஞனின் பங்களிப்பின்றி நின்று போனதில்லை. எங்கள் கலைஞர்கள் இதனை நாடக செயற்பாடாக எண்ணாமல் விடுதலைப் போரின் ஒரு அங்கமாகவே கருதி செயற்பட்டனர். பல சமயங்களில் மக்களின் வீட்டு முற்றத்திலேயே நாடகம் நடத்தி அவர்களின் வீடுகளிலேயே தங்கியும் இருக்கின்றார்கள்.

ஈழமுரசு இதழிலிருந்து...

(தொடரும்.....)

# கிராமசேவையாளர் கொடுப்பனவுகள் இழுத்தடிப்பால் கடமை பகிஷ்கரிப்பு!

(ஜீவா)

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 22கிராமசேவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதில் பாரபட்சமும், இழுத்தடிப்பும் கடைப்பிடிக்கப்படுவதாக கூறி 31.12.2003 திகதி சகல கிராமசேவகர்களும் ஒரு நாள் அடையாள வேலைப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இச்செயலகத்தில் கடமையாற்றும் ஒவ்வொரு கிராமசேவையாளருக்கும் பயிர்ச் செய்கை தொடர்பான ஆறுமாதக் கொடுப்பனவாக 1200ரூபாவும், மூன்று மாத பிரயாணப்படியாக 450ரூபாவும், வதிவிடத்திலிருந்து கடமையாற்றுமிடம் செல்லும் மூன்று மாதக் கொடுப்பனவாக 720ரூபாவும் வழங்கப்படவில்லையென கிராம சேவையாளர்கள் தெரிவித்தனர். அதேவேளை இச்செயலகத்தில் கடமையாற்றும் சிற்றூழியர் முதல் செயலாளர் வரையான சகல தரத்தினரும் தமக்குரிய 2003ம் ஆண்டுக்கான சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொண்டுள்ள வேளை தம்மை மாத்திரம் புறக்கணிப்புச் செய்துள்ளமை குறித்துச் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக பிரதேச செயலாளர் ஏ.கே. தவராசா தெரிவிக்கையில் செயலகத்திலுள்ள ஒவ்வோர் பணிப்பிரிவிற்கும் கட்டங் கட்டமாக நிலுவைக் கொடுப்பனவுகள் ஓர் ஒழுங்கு நடைமுறையில் வழங்கப்பட்டதாகவும், வருட இறுதியில் நிதி அறிக்கைகள் பூரணப்படுத்தப்பட வேண்டிய அவசியம் காரணமாக கிராமசேவையாளர் கொடுப்பனவுகளை வழங்க முடியாது போனமை கவலை தருவதாகவும், எவ்வாறாயினும் தைப்பொங்கல் திருநாளுக்கு முன்னதாக கிராமசேவையாளர்களுக்குரிய சகல கொடுப்பனவுகளையும் வழங்க உரிய நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# திருக்கோவிலில் புதிய ரெலிகொம் பரிவர்த்தனை நிலையம் திறப்பு, 300பேருக்கு இணைப்பு வசதி

(ஜீவா)

திருக்கோவில் பிரதேசத்தில் புதிய தொலைபேசி பரிவர்த்தனை நிலையம் கடந்த 30ம் திகதி பாராளுமன்ற உறுப்பினர் அ.சந்திரநேருவால் திறந்து வைக்கப்பட்டது. இப்பரிவர்த்தன நிலையக் கட்டிட நிர்மாணிப்புக்கு புதிதாக தொலைபேசி பெற விண்ணப்பித்தவர்கள் தலா 500ரூபா வீதமும், நாடாளுமன்ற உறுப்பினரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் 90,000ரூபாவும் ஒதுக்கீடு செய்யப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

சுமார் முந்நூறு இணைப்புக்களை வழங்கக் கூடிய இப்பரிவர்த்தன நிலைய திறப்பு விழாவில் கிழக்கு மாகாண ரெலிகொம் பொறியியலாளர் கிருபாகரன், கிழக்கு மாகாண பிரதிப் பொது முகாமையாளர் கனகசூரியம், கல்முனைப் பிராந்தியரெலிக்கொம் பொறியியலாளர் குபேந்திரன், பிரதேச செயலாளர் ஏ.கே தவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

திறப்பு விழா நிகழ்வில் புதிய 067மாவட்ட இலக்க இணைப்புகள் பாராளுமன்ற உறுப்பினர் இல்லத்திற்கும், இன்னும் இரு புதிய வாடிக்கையாளர்க்கும் வழங்கப்பட்டதுடன், பிரதேச செயலகம் முதல் திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் வரையிலான எல்லைக்குள் உள்ள வாடிக்கையாளர்களுக்கு புதிய இலக்கம் வழங்கப்பட்டும், புதிதாக விண்ணப்பித்தோருக்கு இணைப்புகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தின் முழுமையான பகுதிகளுக்கும் 2மாத காலத்துக்குள் புதிய இணைப்புக்களும், பழைய வாடிக்கையாளர்களுக்கான இலக்க மாற்றமும் செய்து கொடுக்கப்படுமென ரெலிகொம் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை, புதிதாக தொலைபேசி இணைப்பைப் பெறுவோர் கட்டுப்பணமாக 24,000ரூபாவை மூன்று தவணை அடிப்படையில் செலுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அக்கரைப்பற்று வைத்தியசாலையின் அவசியத் தேவைகளுக்கு சுகாதார அமைச்சு இணக்கம்

(ஜீவா)

இன,மத,மொழி வேறுபாடுகளுக்கப்பால் மூவினங்களையும் சேர்ந்த டாக்டர்கள் முதல் சிற்றூழியர் வரையான சேவையாளர்கள் மனித நேயப்பண்புகளுடன் சிறந்த சேவையை அனைத்து இன மக்களுக்கும் வேறுபாடின்றி ஆற்றி வருவது இன ஐக்கியத்துக்கும், ஒருமைப்பாட்டிற்கும், சமாதான சகவாழ்விற்கும் அடிகோலும் நிலைமையை உருவாக்கி வரும் அக்கரைப்பற்று மாவட்ட வைத்தியசாலையின் அவசரமான அவசிய தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுவதாக சுகாதார நலலிணக்க அமைச்சர் பி.தயாரத்ன உறுதியளித்துள்ளார்.

கடந்த 26.12.2003ல் இவ் வைத்தியசாலைக்கு திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவுடன் வருகை தந்த அமைச்சர் சுமார் 25லட்சம் பெறுமதியான புதிய அம்பியூலன்ஸ் வண்டியை மாவட்ட வைத்திய அதிகாரி ஐ.எ.எல். சித்திக்கிடம் கையளித்த போது தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில்; வைத்தியசா லைப் புனரமைப்புக்கு 40லட்சம் ரூபாவை ஒதுக்கித்தருவதாகவும், அதிக மின்வலு கொண்ட புதிய ஜெனரேற்றர் ஒன்றை வழங்குவதாக வும் தெரிவித்தார்.

இவ்வைத்திய சாலையில் திறந்த நோயாளர் சிகிச்சைப்பிரிவில் தினம் 300-400 பேரும், விடுதி நோயாளர்களாக தினம் 17-22பேரும், தங்கிச் சிகிச்சை பெறுவோர் சராசரியாக 50பேரும், மகப்பேற்றுக்காக மாதாந்தம் 60-70பேருக்கும் சிகிச்சையளிக்கும் இவ்வைத்தியசாலையில் சிற்றூழியத் தொண்டர்களாக பணியாற்றும் 2முஸ்லிம், 4தமிழர், 3சிங்கள இனத்தைச் சேர்ந்தோருக்கு வைத்திய அதிகாரிகளின் மேலதிகக் கடமை நேரக் கொடுப்பனவுகள் மற்றும் பொது மக்களின் அன்பளிப்புகள் மூலம் கிடைக்கப் பெறும் நிதி சமமாகப் பங்கிடப்பட்டு ஊக்குவிப்புத் தொகையாக வழங் கப்படுவதாக மாவட்ட வைத்தியதிகாரி தெரிவித்தார். இவ்வைத்தியசாலைக்கு புதிதாக 3மாடிக் கட்டிடம் அமைத்து தருமாறு கோரிக்கையும் அமைச்சரிடம் விடுக்கப்பட்டது.

ஆயினும், போதிய இட வசதி இன்மை காரணமாக, நோயாளர் நலன்கருதி வைத்தியசாலை பௌதிக வளங்களை விஸ்தீரணம் செய்வதிலும், கழிவுகள் அகற்றுவதிலும் அதிக சிரமங்கள் காணப்படுவதாலும் காற்றோட்ட வசதிக்குறைவு, சூரியக் கதிர் வீச்சுகள் குறைவாகக் கிடைப்பதனாலும் இவ்வைத்தியசாலையைத் தற்போதைய அக்கரைப்பற்று பொலிஸ் நிலையம் அமைந்துள்ள நிலப்பரப்பில் போதிய கட்டிட வசதிகளை ஏற்படுத்தி சகல வசதிகளுடன் கூடிய சிறந்த சுகாதர சூழற் தொகுதியுடன் இடமாற்றம் செய்வது உசிதமானதென பொது மக்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இவ்வைத்தியசாலைக் கட்டிடமே முன்னாளில் பொலிஸ் நிலையமாக இருந்தமையும் அக்கரைப்பற்று விசேட அதிரடிப்படை முகாம் வைத்தியசாலையாகவும் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆயினும் படைத்துறை அமைச்சு இப்பரப்பை தமதாக்கிக் கொண்டுள்ளதால் மீண்டும் வைத்தியசாலை பழைய இடத்திற்குச் செல்ல முடியாத நிலையில் புதிய மாற்றீடு மிகுந்த பயனளிக்கும் என்றும், பெருகும் சனத்தொகைக் கேற்ப வைத்தியசாலையை தரமுயர்த்த முடியுமெனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக அரசியல் வாதிகள் மனக்கசப்புகளை மறந்து மக்கள் சேவையை மதித்து செயலாற்றுவது அவசியமென்றும் மேலும் தெரிவிக்கின்றனர்.

# கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை

(எம்.யுவராஜ்)

தீவுச்சேனையைப் பிறப்பிடமாகவும், நவநேசபுரத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் புவனேஸ்வரி என்பவரின் 626083978-V என்னும் இலக்கத்தையுடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு தமிழ் அலை அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி பெற்றுச் செல்லவும்.

# காயான்மடு வீதிகள் சிரமதானம் மூலம் புனரமைப்பு

(எம்.யுவராஜ்)

குறிஞ்சாமுனை சிவசக்தி கலைக்கழகத்தினர் பல நீண்ட காலமாக சீரழிந்த நிலையில் காணப்படும் காயான்மடு, குறிஞ்சாமுனைப் பகுதியிலுள்ள பல உள்வீதிகளை சிரமதான அடிப்படையில் புனருத்தாரணம் செய்து வருகின்றனர்.

இந்த வகையில் நேற்று முன்தினமும் நேற்றும் காயான்மடு குறிஞ்சாமுனைக் கிராமங்களிலுள்ள உள் வீதிகள் மேற்படி கழகத்தினரால் மிகவும் சிறந்த முறையில் புனருத்தாரணம் செய்யப்பட்டது. இவ்வீதிகளுக்கு புதிய பெயர் மிக விரைவில் சூட்டவுள்ளதாகவும் கழகத்தின் தலைவர் தமிழ் அலைக்குத் தெரிவித்தார்.

# இன்று பாடசாலைகள் ஆரம்பம்

(கல்லடி நிருபர்)

நாடெங்கிலுமுள்ள தமிழ் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள் புதிய கல்வி ஆண்டின் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைக்காக இன்று (திங்கட் கிழமை) ஆரம்பமாகின்றன.

இதேவேளை தமிழ்-சிங்கள மொழிமூலப் பாடசாலைகள் 2003ஆம் ஆண்டின் மூன்றாந் தவணை நிறைவில் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்கள் ஊடாக அபிவிருத்தி மேற்கொள்வதே சிறந்தது.

(நமது நிருபர்)

உலக நாடுகள் இன்று திறந்த பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையிலேயே தங்களின் அபிவிருத்தித் திட்டங்களை முன்னோக்கி எடுத்துச் செல்கின்றன. இதற்கு இலங்கை விதிவிலக்கல்ல. இதன் வழியில் அபிவிருத்தி திட்டங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தனியார் நிறுவனங்கள் போன்றவற்றினூடாகவே எடுத்துச் செல்வதினையே உலக நிதிவழங்கும் நாடுகளும், ஸ்தாபனங்களும் விரும்புகின்றன.

இவ்வாறு மட்டக்களப்பு இணையத் தலைமைக்காரியாலயத்தில் இணையத் தலைவர் எந்திரி என்.வி.றஞ்சன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்:

எமது மாவட்ட அபிவிருத்திப் பணியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கும் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்த வேலைத்திட்டங்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளும் அளவிற்கு எமது 43உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களையும் வலுப்படுத்திச் செய்ய வேண்டிய ஒரு பெரும் பொறுப்பு என்மீது சுமத்தப்பட்டுள்ளது. எனவே உங்கள் அனைவரினதும் பூரண ஒத்துழைப்புடன் எனது பணியினை செவ்வனே நிறைவேற்று[illegible]ன் மேலும் எதிர்வரும் கால[illegible]ளில் எமது செயற்குழு பொதுக்கூட்டங்களுக்கு சர்வதேச அரசசார்ப ற்ற நிறுவனங்களும் பங்கு பற்ற இருப்பதை மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்வதோடு இவர்களும் எதிர் காலத்தில் எமக்கு பூரண ஆதரவு வழங்க உள்ளனர் என்பதையும் தெருவிக்க வேண்டியவனாக உள் ளேன் என்றார்.

இக்கூட்டத்திற்கு பிரதம அதிதியாக எந்திரி ஜஸ்ரீன் ராஜேந்திரம் கௌரவ அதிதியாக ராஜன் சத்தியமூர்த்தியும் கலந்து சிறப்பித்தனர்.

# 31வது நாள் நினைவு நிகழ்வு

(எம்.யுவராஜ்)

கடந்த 4-12-2003ந் திகதியன்று சாவினைத் தழுவிக் கொண்ட தமிழீழ விடுதலைப்புலி போராளியான லெப்டினன் லதீபன் (தங்கராசா-மோனகுமார்) னின் 31ம் நாள் நினைவு நிகழ்வு நேற்று கன்னன்குடாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# தலைவர்கள் இரகசிய சத்தியப்பிரமாணம் எடுத்ததாக உலகத்தில் எங்குமில்லை

## அமைச்சர் பீரிஸ்

எந்தவொரு ஜனநாயக நாட்டிலும் எந்த அரச தலைவர்களும் ரகசியமாக சத்தியப்பிரமாணம் எடுத்ததாக சரித்திரம் இல்லை. என்று அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். மேலும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிப் பதவிக்காலம் எதிர் வரும் 2005ம் ஆண்டுடன் முடிவுறுகிறது என்றும் தெரிவித்தார்.

மேற்படி கபினற் தீர்மானத்தை அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் 1ம் திகதி கொழும்பு - கொள்ளுப்பிட்டி அரச கிராமோதய மண்டப சபை அரங்கில் நடந்த விசேட பத்திரிகையாளர் மகாநாட்டில் கூறியுள்ளார். 1999ம் ஆண்டு டிசெம்பர் மாதம் இரண்டாவது தடவையாகவும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க மக்கள் வாக்களித்ததன் மூலம் தெரிவு செய்யப்பட்டு சத்தியப்பிரமாணம் எடுத்ததை மக்கள் தொலைக்காட்சி மூலமும் வானொலி மூலமும் பார்த்தனர். அப்படியிருக்கையில் ரகசியமாக இன்னொரு தடவை 2000ம் ஆண்டு சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கான காரணம் ஏற்கனவே ஜனாதிபதி இப்படியொரு பிரச்சினை ஏற்படும் என்பதை அறிந்திருந்தாரா? மூன்று அமைச்சுக்களையும் கைப்பற்றி பிரச்சினைகளை ஏற்படுத்துவதற்கு ஏற்கனவே திட்டமிட்டிருந்தாரா? எது எப்படியிருந்தாலும்

தற்போது அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு ஜனநாயகம் என்ற பிறேமுக்குள்ளேயே தீர்க்கப்படவேண்டும். இலங்கை மக்கள் 1931ம் ஆண்டிலிருந்து சர்வஜன வாக்குரிமையைப் பெற்றிருக்கின்றார்கள். மக்களுக்கு உரிமையான அந்த வாக்குரிமையைப் பறிப்பதற்கோ அல்லது தள்ளி வைப்பதற்கோ எந்த ஆட்சியாளர்களுக்கும் முடியாது.

மேலும் பிரதேசசபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்காக நடவடிக்கைகளை அரசாங்கம் முறியடித்து சரியான நேரத்தில் தேர்தலை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது. 1005ம் ஆண்டு ஜனாதிபதியின் ஆட்சிக்காலம் முடிவடைகிறது. என்பதில் அரசாங்கம் தெளிவாக உள்ளது. ஆனால் இதுவரை ஜனாதிபதிச் செயலகத்தில் இருந்து இப்படியான முறையற்ற ரீதியில் சத்தியப் பிரமாணம் எடுத்தது பற்றி எவ்வித அறிக்கையொன்றும் வெளியாக வில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பதவிக் காலம் குறித்து உயர் நீதி மன்றமே தீர்மானிக்க வேண்டும்!

(நமது நிருபர்)

ஜனாதிபதி பதவிக்காலம் முடிவுறுத்தப்படும் விடயம் தொடர்பில் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்படும் கருத்துக்களை மறுதலித்திருக்கும் ஜனாதிபதி தரப்பு, இது விடயத்தில் தீர்ப்புக்கூறும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இல்லையெனத் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் பதவிக் காலம் 2005 ஆம் ஆண்டு முடிவுறுத்தப்பட வேண்டுமென அமைச் சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருந்தது குறித்து நேற்று தினக்குரலுக்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ், அரசாங்கமோ, அமைச்சர் பீரிஸோ இதனைத் தீர்மானிக்க முடியாதென்றும், உயர் நீதிமன்றமே இதனைத் தீர்மானிக்க வேண்டுமென சொன்னார்.

ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான சர்ச்சைக்கு உயர்நீதிமன்றமே பதில் கூறுமென குறிப்பிட்ட அவர், இதனால் இது தொடர்பில் அநாவசிய வாதப்பிரதிவாதங்கள் தேவையில்லை யென்றும் சொன்னார். மாகாணசபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவது போன்ற நடவடிக்கை இடம்பெறுவதாக அர சாங்கம் தெரிவித்துள்ளமை பற்றிக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதியின் பேச்சாளர் இவ்வாறான அறிவிப்பு இதுவரை வெளிவராத நிலையில் இப்படி குற்றஞ்சாட்டுவது அர்த்த மற்றதெனக் குறிப்பிட்டதுடன், அரசியலமைப்பின் பிரகாரம் இதனை ஒத்திவைக்க முடியாதென்றும் கூறினார்.

# பலாலி விமான ஓடுபாதையை புனரமைக்க இந்தியா நிதி உதவி!

(நமது நிருபர்)

பலாலி விமான நிலையத்தின் தள ஓடுபாதையை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசாங்கம் 500 மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல இந்தியாவிற்கு விஜயம் செய்த போது, இந்திய அரசினால் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பலகல்லவின் நான்கு நாள் இந்திய விஜயத்தின்போது, இந்திய ஹெலி கொப்ரர்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் குடாநாட்டின் படைகளை ஏற்றி, இறக்குவது தொடர் பாகவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் ஆராயப்பட்டுள்ளது. இதேவேளை விமான ஓடுபாதை திருத்த வேலை நடைபெறும் போது யாழ். குடாநாட்டிலுள்ளபடையினரின் பயணங்களில் சிக்கல்கள் தோன்றலாமெனவும் தெரிவி க்கப்படுகிறது.

விமான ஓடுபாதை மிகவும் அவசரமாகத் திருத்தப்பட வேண்டியுள்ளது. சீரற்றிருக்கும் தற்போதைய விமான நிலைய ஓடுபாதை தொடர்ந்தும் இப்படியே பயன்படுத்தப்பட்டால் விமானங்கள் தரையிறங்குவதில் பாரிய சிக்கல்கள் உருவாகும்.

இதன்மூலம் பிரதானமாக விமானம் மூலம் விநியோகங்களைப் பெறும் படையினர் பாதிக்கப்படுவர் என பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். 1500 அடி நீளமான இந்த விமான நிலைய ஓடுபாதையை வீதி அபிவிருத்தி அதிகாரசபை இந்திய விமானப்படையின் அறிவுறுத்தலின் கீழ் புனருத்தாரணம் செய்யவுள்ளது.

மிகவும் நவீன முறையில் விமான நிலைய ஓடுபாதை புனருத்தாரணம் செய்யப்படவுள்ளதாகவும், சமிக்ஞை விளக்குகள் நவீன முறையில் பொருத்தப்படுவதோடு, ஓடுபாதையைக் கண்காணிக்கும் கருவிகள் நவீனமயப்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு விமான ஓடுபாதையைத் திருத்தும்போது வழக்கமான விமானப் பயணசேவை எவையும் பாதிக்கப்படமா ட்டாதெனவும் தெரிவிக்கப்படுவதுடன், விமான நிலைய ஓடுபாதை திருத்துதல் மூலம் மந்தமான நிலையிலுள்ள யாழ். குடா புனரமைப்பு வேகம் பெறும் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஓடுபாதை திருத்தும் பணி நிறைவடைந்ததும், இரத்மலானை-பலாலி ஆகியவற்றுக்கு இடையிலான விமான சேவை ஆரம்பிக்கப்படுமெனவும் தெரிவிக் கப்படுகிறது. இந்த நடவடிக்கைகள் மூலம் இலங்கையும் - இந்தியாவும் பாதுகாப்பு தொடர்பில் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்த் துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# யாழ் குடா நாட்டில் சிறுவர் துஷ்பிரயோகம் பெண்களுக்கு எதிரான வன்முறை அதிகரிப்பு

(நமது நிருபர்)

குடாநாட்டில் சிறுவர் துஷ்பிரயோக நடவடிக்கைகளும், பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைச் சம்பவங்களும் அதிகரி த்து வருகின் றன.

இதனால் சிறுவர்களும், பெண்களும் பெரும் பாதிப்புக்களை எதிர்நோக்கி வருகின்றார்கள். சிறுவர் உரிமைகளும், பெண்கள் உரிமைகளும் தமிழ் சமுதாயத்தில் பரவலாக மீறப்பட்டுவருவது குறித்து புத்திஜீவிகள், அதிகாரிகள், மதவாதிகள், பெண்ணிலையாளர்கள் மற்றும் சமுதாய ஆர்வலர்கள் மத்தியில் பெரும் அதிருப்தியும், அதிர்ச்சியும் ஏற்பட்டுள்ளது.

இங்கு பெருமளவில் நிலவுகின்ற வறுமை, வேலைவாய்ப்பின்மை போன்றவை இத்தகைய உரிமைகள் மீறப்படுவதற்கான அடிப்படை காரணங்களாகக் கொள்ளப்படுகின்றன. பாடசாலைகளுக்குச் சென்று கல்வி பயில வேண்டிய வயதில் சிறுவர்கள் உணவுச்சா லைகள், தேனீர்ச்சாலைகள், வாகனங்கள் திருத்துமிடங்கள் மற்றும் சிறு கைத்தொழில்சாலைகளில் சொற்ப ஊதியத்தில் வேலைக்கமர்த் தப்பட்டுள்ளனர். இத்தகைய சிறு வர் கள் தமது குடும்பங்களின் வாழ் வுக்கும் வளர்ச்சிக்கும் தம்மை மெழுகுவர்த்தி போல உருக்கி வருகின்றனர்.

*சொந்த பந்தப் பிரச்சினைகள்*

இதேவேளை கீழ்மட்ட மற்றும் மத்தியதரக் குடும்பங்களில் பெண்களுக்கு எதிரான வீட்டு வன்முறைச் சம்பவங்களும் பெருமளவில் அதிகரித்து காணப்படுகின்றன. இவற்றின் பின்னணியில் சீதனப் பிரச்சினை, சொத்துப் பிரச்சினை, வேலையில்லாமை மற்றும் சொந்த பந்தப் பிரச்சினைகள் அடிப்படையாக கொள்ளப்படுகின்றன.

வீட்டு வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்படுகின்ற பெண்கள் தமது வேதனை களையும், துயரங்களையும் தமக்குள்ளேயே பதுக்கி வைத்து மனதுக்குள் அழுது தீர்க்கின்றனர். இவற்றைப் பொறுக்கமுடியாத நிலையில் இருக்கும் பெண்கள் தமது கணவன்மார்களின் கொடுமைகளில் இருந்து விலகும் பொருட்டு பொலிஸ், நீதிமன்றங்கள் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளை நாடித்தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயல்கின்றனர்.

இதேநிலையில் இக்குடும்பங்களில் இருக்கின்ற சிறுவர்களின் வாழ்வு பாதுகாப்பற்றதாகவும் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் மழுங்கடிக்கப்படுகின்ற தன்மைகளும் உருவாகின்றன. குடாநாட்டில் சிறுவர் உரிமைகள் மற்றும் பெண்கள் உரிமைகள் பற்றிய விழிப்புணர்வு நடவடிக்கைகள் பரவலாக ஏற்படுத் தப்பட்டிருந்த போதிலும்கூட அவை சமுதாயத்தில் சிறிதளவேனும் நடைமுறையில் பாதுகாக்கப் படவில்லை என்பது உண்மையாகும்.

*வீட்டுப் பணிகளில் சிறுவர், சிறுமியர்*

பதினெட்டு வயதுக்குட்பட்ட சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படக்கூடாது என்பது சட்டமாகும். ஆயினும் யதார்த்தத்தில் இது எவ்வளவு தூரம் கடைப்பிடிக்கப் படுகின்து என்பது கேள்விக்குரியதாகும். சமுதாயத்தில் உயர்மட்டக் குடும்பங்களில் வீட்டு வேலைகள் பணியில் சிறுவர், சிறுமிகள் இன்னமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இது இவ்விதமிருக்க யாழ்ப்பாண மாவடடத்தில் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகின்ற இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களில் தங்கியிருகின்ற 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுவர்களை ஏனைய சிறுவர்களுடன் பார்க்கின்றபோது பல அடிப்படை வசதிகள், வாய்ப்புக்கள் அற்ற நிலையிலேயே தமது வாழ்வை ஓட்டி வருகின்றனர். கல்வி வசதி, சுகாதார வசதி பொழுது போக்கு வசதி மற்றும் நிறைவான உணவு இன்றி பெரும் துன்பங்களுக்கு மத்தியில் நிறைவற்ற வாழ்வை ஏக்கப் பெருமூச்சுடன் நடத்துகின்றனர்.

# தமிழர் புனர்வாழ்வு கழகத்தினால் கன்னியா கிராமம் மீள அபிவிருத்தி!

(சசிகுமார்)

வடக்கு, கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்புத் திட்டம் (நிகொட்) திருக்கோணமலை தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மூலமாக கன்னியா கிராமத்தினை மீள் அபிவிருத்தி செய்யும் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்கான ஒப்பந்தம் வெள்ளிக்கிழமை (02.01.2004) மதியம் கைச்சாத்திடப்பட்டது. 6.3 மில்லியன் ரூபா செலவில் இத்திட்ம் நடை முறைப படுத்தப்படவுள்ளது. நிகொட் நிறுவனத்தின் திருக்கோணமலை பிரதிப்பணிப்பாளர் இ.உமாகாந்தன் முன்னிலையில் அரசாங்கத்தின் சார்பில் திருக்கோணமலை அரசாங்க அதிபர் காமினி ரொட்றிக்கோவும் ,தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் மாவட்ட இணைப்பாளர் கோ.மாதவராசாவும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

1990 ம் ஆண்டு இடம் பெற்ற வன்செயலலைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் குடியிருந்த சுமார் 473 குடும்பங்கள் வெளியேறின. தற்போது அரசாங்கத்தின் மீளக்கு டியமர்வுத் திட்டத்தின் மூலமாக படிப்படியாக மீளக்குடியமர்ந்து வருகினறனர். தற்போது கன்னியா கிராமசேவகர் பிரிவில் 170 குடும்மபங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தின் படி 10 வீதிகள் அமைக்கப்படுவதுடன், 3 புதிய பொதுக்கிணறுகளும், 4 பழைய பொதுக்கிணறுகள் திருத்தம் செய்யப்படும். சகல வசதிகளும் கொண்டதான பாலர் பாடசாலை கட்டிடம், பலநோக்கு மண்டபம் என்பனவும் அமைக்கப்படும். அத்துடன் சுழற்சி முறைக் கடன் அடிப்படையில் 63 பயனாளிகளுக்கு 1.3. மில்லியன் ரூபா வருமானம் உழைக்கும் கடனாகவும் வழங்கப்படவுள்ளது.

திருக்கோணமலை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைத்து எளிமையான முறையில் இத்திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

# போர்க் கால மனநிலையுடன் சிறிலங்கா பொலிசார்!

(நமது நிருபர்)

*பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா*

சிறிலங்கா காவல்துறையினர் இப்போதும் போர்க்கால மனநிலையுடனே செயற்பட்டு வருவதாக சிறிலங்காவின் காவல்துறை மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலர் தவறிழைத்து வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொறலஸ்கமுவவில் அமைந்துள்ள சிறிலங்கா காவல்துறையினரின் காவலரணொன்றை சிறிலங்காவின் 400 ஆவது காவல் நிலையமாக திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே, காவல்துறை மா அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக சட்டம், ஒழுங்கு ஆகிய வற்றை பேணும் நடவடிக்கையில் சிறிலங்கா காவல்துறையினர் ஈடுபட வில்லை என்று தெரிவித்த அவர், இலங்கையில் நிலவிய போர்ச்சூழல் காரணமாக காவல்துறையினர் படைத்துறையினர் போலவே செயற்பட்டு வந்ததாகவும் குறிப்பிட்டார். காவல்த்துறையினர் தமது செயற்பாடுகளை பொதுவான சமூகச் சூழலுக்கு ஏற்றதாக மாற்றியமைத்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்றும் அவர் அங்கு மேலும் தெரிவித்தார். தற்போது இலங்கையில் அமைதிச் சூழலொன்று நிலவும் வேளையில் காவல்துறையினர் மிகவும் அவதானமாகச் செய ற்பட வேண்டியிருப்பதாகவும், மீண் டும் இந்த நாட்டை போருக்கு இட்டுச் செல்லும் வகையில் அவர்கள் செயற்படக்கூடாது எனவும் அவர் தெரிவித்தார். இலங்கையில் தற்போது அமைக்கப்பட்டிருக்கும் பல்வேறு காவலரண்கள், மற்றும் சோதனை நிலையங்கள் பற்றிக் குறிப்பிட்ட அவர், இவற்றுள் பெரும்பாலானவை பொதுமக்களின் நன்மை கருதி அமைக்கப்பட்டவையல்ல என்றும் தெரிவித்தார்.



மாவட்ட அரசாங்க அதிபர் காமினி ரொட்றிக்கோ ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல், அருகில் திருக்கோணமலை நிகொட் பிரதிப்பணிப்பாளர் இ.உமாகாந்தன், தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தன் இணைப்பாளர் கோ.மாதவராசா அவதானித்தல், தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் இணைப்பாளர் கோ.மாதவராசா ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுதல், நிகொட் திட்ட அலுவலகர் சந்திரசேகரன், அரசாங்க அதிபர் காமினி ரொட்றிக்கோ, நிகொட் பிரதி திட்ட பணிப்பாளர் இ.உமாகாந்தன், தமிழர்புனர்வாழ்வுக்கழகத்தின் இணைப்பாளர் கொ.மாதவராசா, திட்ட அலுவலகர் ந.கலைவர்ணன் ஆகியோர் ஆவணங்களை சரிபார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தை அரசாங்க அதிபர் காமினி ரொட்றிக்கோ, தமிழர்புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் கொ.மாதவராசா ஆகியோர் பரிமாற்றிக்கொள்ளுதல் மத்தில் நிகொட் பிரதி திட்டபணிப்பாளர் இ.உமாகாந்தன் நிற்றல். போன்றவற்றை படத்தில் காணலாம்.

(படமும், தகவலும்.சசிகுமார்)

# பாகிஸ்தானில் சார்க் மாநாடு வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடு

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நேற்று துவங்கி 3 நாட்களுக்கு நடைபெறும் சார்க் மாநாட்டில் கலந்துகொல்வதற்காக பாகிஸ்தான் சென்ற பிரதமர் வாஜ்பாய்க்கு முப்படை அணிவகுப்புடன் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இஸ்லாமாபாத் சர்வதேச விமான நிலையத்தில் வாஜ்பாயை பாகிஸ்தான் பிரதமர் ஜாபருல்லா கான் ஜமாலி கைகுலுக்கி வரவேற்றார்.

இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், பூடான், வங்கதேசம், மாலத்தீவு ஆகிய 7 தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் சுருக்கம்தான் சார்க் என்பதா கும். இந்த தெற்கு ஆசிய நாடுகளின் உச்சிமாநாடு கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு நேபாளத் தலைநகர் காத்மாண்டில் நடைபெற்றது. அப்போது இந்தியாவின் சார்பில் பிரதமர் வாஜ்பாயும், பாகிஸ்தான் சார்பில் அந்நாட்டு ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும் கலந்துகொண்டனர். அந்த சமயத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே உறவில் சற்று விரிசல் ஏற்பட்டதால் முஷாரப்பை சந்திக்க மாட்டேன் என்று வாஜ்பாய் கூறியிருந்தார். ஆனால், யாரும் எதிர் பாராதவகையில் மாநாட்டு மேடையிலேயே வாஜ்பாயுடன் தானாக முன் வந்து கைகுலுக்கினார் முஷாரப்.

நேபாளத்திற்கு அடுத்தபடியாக சார்க் மாநாடு கடந்த ஆண்டு ஜனவரிமாதம் 13, 14 தேதிகளில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால், கடந்த 2001-ம் ஆண்டு டிசம்பர்மாதம் 13-ம் திகதி இந்திய பாராளுமன்றத்தின்மீது பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக் குதல் நடத்தியதை அடுத்து இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் பதட்டம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து இருநாட்டு உறவுகளும் துண்டிக்கப்பட்டன.

இதனால், அந்த சார்க் உச்சிமாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளாது என்று அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாக கடந்த ஆண்டு ஜனவரிமாதம் நடைபெறுவதாக இருந்த சார்க் மாநாட்டை பாகிஸ்தான் தள்ளிப்போட்டது.

அதன் பிறகு பிரதமர் வாஜ்பாய் மேற்கொண்ட நல்லெண்ண நடவடிக்கைகளின் காரணமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மீண்டும் சுமூகமான உறவு ஏற்பட்டது. இதனைத்தொடர்ந்து இந்த ஆண்டு நடைபெறும் சார்க் உச்சிமாநாட்டில் கலந்துகொள்ள இந்தியா முடிவு செய்தது. அதன் அடிப்படையில் சார்க் உச்சிமாநாட்டில் கல்ந்துகொள்ள பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் சென்றார். நேற்று பிற்பகல் டெல்லியில் உள்ள இந்திராகாந்தி சர்வதேச விமானநிலையத்தில் இருந்து இந்திய விமானப்படையின் விசேஷ விமானம் மூலம் பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தான் புறப்பட்டுச் சென்றார். டெல்லி விமான நிலையத்தில் பிரதமர் வாஜ்பாயை துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி, மத்திய அமைச்சர்கள், பாரதியஜனதா தலைவர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோர் வழி அனுப்பி வைத்தனர்.

நேற்று மாலை பிரதமர் வாஜ்பாயின் விமானம் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. விமானத்திலிருந்து பிரதமர் வாஜ்பாய் கீழே இறங்கிவர பாகிஸ்தான் பிரதமர் மிர் ஜாபருல்லாகானை பாகிஸ்தானுக்கான இந்தியத்தூதர் சிவசங்கர மேனன் விமானத்தை நோக்கி வழிநடத்திச்சென்றார். வாஜ்பாய் கீழே இறங்கியதும் அவரை பாக். பிரதமர் ஜாபருல்லா கான் ஜமாலி கைகுலுக்கி வரவேற்றார். இதர பாகிஸ்தான் அமைச்சர்களும்



உயர் அதிகாரிகளும் வாஜ்பாய்க்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாஜ்பாயின் வருகையை முன்னிட்டு பாதுகாப்பு காரணங்களுக்காக சீல்வைக்கப்பட்ட இஸ்லாமாபாத் விமான நிலைய த்தில் வாஜ்பாய்க்கு பாகிஸ் தான் முப்படை வீரர்கள் அணிவ்குப்பு மரியாதை செலுத்தினர். சிவப்புக் கம்பள வரவேற்புடன் அளிக்கப்பட்ட முப்படை வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக்கொண்டார். அதன் பிறகு வாஜ்பாயும், ஜமாலியும் பேசிக்கொண்டே வாஜ்பாய் பயணத்திற்காக இந்தியாவிலிருந்து பிரத்யேகமாக கொண்டுவரப்பட்ட குண்டு துளைக்காத காருக்கு சென்றனர். வாஜ்பாயை ஜமாலி வழி நடத்திச் சென்றார்.

காரை நெருங்கியபோது அங்கே கூடியிருந்த ஏராளமான பத்திரிகையாளர்களும், புகைப்படக்காரர்களும், டி.வி. கமராக்காரர்களும் அந்த இரு தலைவர்களையும் போட்டோவுக்கு போஸ் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டனர். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு வாஜ்பாயும், ஜமாலியும் கைகுலுக்கியபடி போட்டோவுக்கு போஸ் கொடுத்த பிறகு கைகளை மேலே அசைத் தனர்.

விமானநிலையத்தில் வாஜ்பாயை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஷ்வந்த் சின்ஹா, தேசிய பாதுகாப்புச் செயலாளர் பிர்ஜேஷ் மிஸ்ரா ஆகியோரும் வரவேற்றனர். அதன்பிறகு வாஜ்பாய் தனது காரில்ஏறி தான் தங்க இருக்கும் ஷெரன் கோட்டலுக்கு புறப் பட்டுச் சென்றார். பாதுகாப்பு கருதி பிரதமர் வாஜ்பாயை அவரது ஓட்டலுக்கு அழைத்துச் செல்ல ராணுவ ஹெலிகாப்டர் தயாராக இருந்தது. ஆனால், அவர் காரிலேயே செல்ல விரும்பியதை யடுத்து அவரது காருக்கு மேலே 2 ராணுவ ஹெலிகாப்டர்கள் வட்ட மடித்தபடியே சென்றன. வாஜ்பாய் சென்ற வழிநெடுகிலும் சாலையின் இருபுறமும் துப்பாக்கி ஏந்திய ராணுவத்தினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டு இருந்தனர்.

இஸ்லாமாபாத் நகரில் உள்ள பிரபல ஷெரன் கோட்டலுக்கு பிரதமர் வாஜ்பாய் சென்றார். இந்த கோட்டலில்தான் பிரதமர் வாஜ்பாய் மூன்றுநாட்களுக்கு தங்கி இரு ப்பார். பிரதமர் வாஜ்பாய் விமான நிலையத்திலிருந்து கோட்டலுக்கு வரும்வரை பாகிஸ்தான் அரசு தொலைக்காட்சி அவரது வருகை யை நேரடியாக ஒளிபரப்பியது. முன்ன தாக வாஜ்பாயின் வாழ்க்கை வரலாற்றையும், அவரைப்பற்றிய குறிப்புகளையும் அந்த டி.வி. ஒளிபரப்பியது.

பிரதமர் வாஜ்பாய் பாகிஸ்தானுக்கு சென்றது இது இரண்டாவது முறையகும். டெல்லி-லாகூர் இடையே பஸ் போக்குவரத்து தொடங்கப்பட்டபோது கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு வாஜ்பாய் பாகிஸ்தான் சென்றார். அதன் பிறகு இப்போது இரண்டாவது முறையாக பாகிஸ்தான் செல்கிறார். என்றாலும், 1978-ம் ஆண்டு மொரார்ஜிதேசாய் பிரதமராக இருந்தபோது அவரது அமைச்சரவையில் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது வாஜ்பாய் முதன்முறையாக பாகிஸ்தான் சென்றார். ராஜீவ்காந்திக்கு அடுத்தபடியாக பாகிஸ்தான் சென்ற இரண்டாவது பிரதமர் இவர்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தானில் பெனசீர்பூட்டோ பிரதமராக இருந்தபோது நடைபெற்ற சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அப்போதைய பிரதமர் ராஜீவ்காந்தி பாகிஸ்தான் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று தொடங்கிய சார்க் உச்சிமாநாடு மூன்று நாட்களுக்கு நடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் பிரதமர் ஜாபருல்லாகான் ஜமாலி, வங்கதேசப் பிரதமர் கலிதா ஜியா உட்பட 7 நாடுகளின் தலைவர்களும் கலந்துகொள்கின்றனர்.

தெற்கு ஆசிய நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பு சுதந்திர வர்த்தக போக்குவரத்து, பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை, பொருளாதார ஒத்துழைப்பு உட்பட பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்தும் இருநாட்டு உறவுகள் குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் எனத்தெரிகின்றது. இம்மாநாட்டிற்காக சென்றுள்ள பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப்பை வருகிற 6-ம் திகதி சந்திக்கலாம் என்றும் பாக். பிரதமர் ஜமாலியை இம்மாதம் 5-ம் திகதி சந்திக்கலாம் என்றும் அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன. ஆனால், இந்த சந்திப்புகள் குறித்து அதிகாரப்பூர்வ தகவல்கள் எதுவும் இல்லை. ஒரு வேளை முஷாரப்பை வாஜ்பாய் சந்தித்தால் அது மூன்றா வது சந்திப்பாக இருக்கும். முதல் முறையாக ஆக்ரா அமைதிப்பேச் சின் போது இருவருமே சந்தித் தனர். அதன்பிறகு, காத்மாண்டில் இரண்டாவது முறையாக சந்தித் தனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் வாஜ்பாய் வருகிற செவ்வாய்க்கிழமை தாய கம் திரும்புவார்.

## வாஜ்பாயின் வருகையால் இந்தியா - பாக் பேச்சுக்கு வழி ஏற்படும் - ஜமாலி

இந்தியப் பிரதமர் வாஜ்பாயின் பாகிஸ்தான் பயணத்தினால் இரு நாடுகளு க்கும் இடையே விரிவான பேச்சுவார்த்தைக்கு வழி ஏற்படும் என்று பாகிஸ்தான் பிரதமர் ஜாபருல்லா கான் ஜமாலி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பான சார்க் உச்சி மாநாடு இன்று தொடங்குகிறது. இதில் கலந்துகொள்வதற்காக பிரதமர் வாஜ்பாய் நேற்று இஸ்லாமாபாத் புறப்பட்டுச் சென்றார்.

பிரதமர் வாஜ்பாயின் இந்தப் பயணம் குறித்து பாகிஸ்தான் பிரதமர் மீர் ஜாபருல்லாகான் ஜமாலியுடன் பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதர் சிவசங்கர் மேனன் ஆலோசனை நடத்தினார்.

நேற்றுமுன்தினம் இரவு ஜமாலியை அவரது இல்லத்தில் மேனன் சந்தித்துப் பேசினார். அப்போது பிரதமர் வாஜ்பாயின் வருகையை ஆவலோடு எதிர்பார்ப்பதாக ஜமாலி கூறினார்.

பிரதமர் வாஜ்பாயின் பாகிஸ்தான் பயணத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையே விரிவான பேச்சுவார்த்தையை துவக்குவதற்கு வழி ஏற்படும் என தான் நம்புவதாக ஜமாலி கூறினார். இரு நாட்டு உறவுகளும் மேலும் வளரும் என்றும் அவர் கூறினார்.

## உலகச் செய்திகள்

# எகிப்து விமானம் செங்கடலுக்குள் வீழ்ந்தது 148 பயணிகள் பரிதாப மரணம்!

எகிப்து நாட்டு விமானம் ஒன்று செங்கடலுக்குள் விழுந்து மூழ்கி விபத்துக்குள்ளானதில் விமானத்திலிருந்த 148 பயணிகளும் இறந்தனர்.

இந்த விபத்து குறித்து விமான போக்குவரத்து உயர் அதிகாரிகள் கூறியதாவது. எகிப் து நாட்டுக்கு சொந்தமான போயிங் 737 ஜெட் விமானம் ஒன்று கெய்ரோவிமான தளத்திலிருந்து நேற்று காலை புறப்பட்டது. புறப்பட்ட சிறிது நேரத்தில் விமான நிலைய கட்டுப்பாட்டிலுள்ள ரேடார் கருவி யிலிருந்து விமானம் மறைந்தது.

அந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்திற்குள் அங்குள்ள செங்கடலில் விழ்ந்து மூழ்கியது. இந்த விபத்தில் விமானத்திலிருந்த 148 பேரும் இறந்துவிட்டதாக கூறப்படுகிறது. விமானத்தில் 142 பயணிகளும், 6 விமான பணியா ளர்களும் இருந்தனர். பயணிகளில் பெரும்பாலானோர் பிரெஞ்ச் நாட்டு சுற்றுலா பயணிகள் ஆவார்கள்.



விமானத்திற்கு தகுந்த பாதுகாப்பு கொடுத்திருந்த போதும் விமானம் விபத்துக்குள்ளாகியுள்ளது. விமான நிலையங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததால் தீவிரவாதிகள் சதிசெயலுக்கு வாய்ப்பில்லை. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்து நடந்திருக்கலாம். இவ்வாறு விமான போக்குவரத்து உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்

விபத்துபற்றி தகவலறிந்ததும், மீட்பு படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்றனர். கடற்கரை ஓரத்தில் விமானத்தின் உடைந்த பகுதிகள் சிதறிக் கிடந்ததை பார்த்தனர். அங்கு உயிருடன் யாரும் இருக்கிறார்களா என தேடினர். இறந்த உடல்களையும் மீட்பு படையினர் தேடி வருகின்றனர். இந்த விபத்து காரணமாக எகிப்தியர்கள் மற்றும் பிரெஞ்ச் நாட்டுக்காரர்கள் பெரும் அதிர் ச்சியடைந்துள்ளனர்

# கடல் வளத்தை பாதுகாத்து வருமானத்தைப் பெருக்கிடுவோம்

நமது தமிழீழம் தன்னகத்தே கொண்டுள்ள அரும் பெரும் வளங்களில் கடல் வளமும் ஒன்றாகும். இயற்கையழகு கொண்ட தீவுகளுடன், மீன் இனம் அதிகமாக வாழுகின்ற பிரதான கண்டமேடைகளையும் கொண்டது எமது தமிழீழக் கடலாகும்.

பண்டைக்காலத்தில் நம் தமிழரசர்கள் புலிக்கொடி கொண்டு செங்கோல் செலுத்தி, கடல்வாணிபக் கப்பல்கள் ஓட்டி, கடல்வளம் காத்து சிறப்புற்ற பெருமையும் தமிழருக்கே உரித்தாகிறது. அத்துடன், முதன் முதலில் இலங்கையின் கடலைக் கடந்து சென்ற பெருமையினையும் தமிழினமே கொண்டுள்ளது.

அதேபோல், எமது தேசியத் தலைவர் அவர்களின் வழிகாட்டலின் பயனாக, தமிழீழக் கடலில் புலிக்கொடியுடன் கப்பல்கள் ஓடுவதையும், கடல் வாணிபம் முன்னேறி வருவதையும் நமது கண்கூடாகக் காண்கிறோம்.

தென் கிழக்காசியாவிலேயே சிறப்பு மிக்க இயற்கைத் துறைமுகத்தையும் நமது கடல் உள்ளடக்கியதுடன், விலை மதிப்புயர்ந்த முத்துக்களையும் மன்னார் வளைகுடாவிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியதாய் இருக்கின்றது. சதுப்பு நிலத் தாவரங்களும் மிக அதிக அளவில் (70சதவீதம்) தமிழீழத்தில் தான் காணப்படுகின்றது.

பருவ கால நிலையும் கூட எமக்குச் சாதகமாகவே அமைகின்றது. சோளகக் காற்று வீசுகையில் மன்னாரில் தாக்கம் ஏற்பட்டால், அங்கிருந்து கிழக்காக வரும் -



வாடைக்காற்று உரமாக வீசினால் கிழக்கில் இருந்து மேற்காகச் செல்வதனால் வருடம் பூராகவும் கடற்றொழில் செய்யக்கூடிய வாய்ப்பையும் இயற்கை எமக்குத் தந்துள்ளமை விசேட அம்சமாகும். மற்றும் தொன்று தொட்டுத் தமிழர்கள் கடல் வளத்தைப் பேணிக்காத்து வந்ததுடன், கடற்றொழில் மூலமாக தமக்குரிய உணவு, வேலைவாய்ப்பு, வருவாய், பொழுது போக்கு போன்றவற்றைப் பெற்று வந்தார்கள். தமது தேவைக்குரிய மீன் உணவில் தன்னிறைவையும் கண்டார்கள். மற்றும், நமது தமிழீழக் கடற்கரையோரம் இயற்கையழகினாலும், சுவாத்தியங்களாலும் கவரப்பட்ட வெளிநாட்டவர்கள் உல்லாசப் பயணிகளாக பெருமளவில் வருகை தருக்கின்றமையும் குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

இதனடிப்படையில், தமிழீழக் கடற்றொழில் ஏற்றுமதி மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை அந்நியச் செலாவணியாக சிறிலங்கா அரசு பெற்றுக் கொள்ள வழியேற்பட்டது. இருந்தும், தமிழர்கள் மீது கொண்ட இனவிரோதம் காரணமாக, அவர்களின் பாரம்பரிய கடற்றொழிலைச் செய்ய விடாது, அடக்கு முறைகளைக் கையாளவும் சிங்கள அரசுகள் பின்நிற்கவில்லை. இறுதியாக ''கடல் வலயப் பாதுகாப்புச் சட்டம்'' என்ற போர்வையில் தமிழ்க் கடற்றொழிலாளர்களைத் தடுத்துள்ளது.

ஆயினும், இச்சட்டத்தால் சிங்களக் கடற்றொழிலாளர்களுக்குப் பாதிப்புகள் ஏற்படாமலும் அரசாங்கம் பார்த்துக் கொள்கிறது. தற்போது நிலவும் அமைதிச் சூழலிலும் கூட தமிழர்கள் கடற்றொழிலில் ஈடுபட முடியாத நிலையே காணப்படுகின்றது. அரசு தடை நீக்கத்திற்கு ஓரளவு முன்வந்தாலும், சிங்களக் கடற்படை நேரத்தடை, தூரத்தடை, வேகத்தடை, என்பவற்றை விதித்து கடற்றொழிலுக்கு முற்று முழுதாக தடை விதிக்கின்றது.



எது எவ்வாறு இருப்பினும், நாம் எமது கடல் வளத்தினைப் பாதுகாத்து, வருமானத்தை ஈட்டுவதற்குச் சிலவழி முறைகளைக் கையாள வேண்டிய காலத்தின் கட்டாயத் தேவையும். இன்று எம்முன் உள்ளது. நாம் மரபுவழி முறையிலான மீன்பிடியில் மாத்திரம் சார்ந்திராது ''நவீனத்துவ முறையில் மீன் பிடித்தல்'' பற்றிய பயிற்சி முறைகளையும் பயின்று கொள்வதுடன், நவீன மீன்பிடி முறைகளையும் பின்பற்ற வேண்டும்.



இன்று, நவீன முறை மீன் பிடித்தலைப் பயன்படுத்திப் பல நாடுகள் மீன்பிடித்துறையில் முன்னேற்றம் கண்டுள்ளதைக் காணமுடிகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக, நமது கடல் வளங்களைப் பாதுகாக்க வேண்டிய நடைமுறைகளையும் மேற்கொள்ள வேண்டும். உதாரணமாக, மனிதக் கழிவுகளை கடற்கரைகளில் கொட்டுதல், அளவுக்கதிகமாக மீன்பிடித்தல்,மீன்பிடிக் கருவிகளால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படும் விளைவுகளைத் தடுத்தல். (உ-ம் பவளப்பாறைகளுக்கு ஏற்படும் தாக்கம்), தப்பிச் செல்லும் மீன்களின் உயிர்வாழ்வு கணிக்கப்படல் போன்றவைகளைத் தடுக்கக் கூடிய வகையில் நாம் அனைவரும் செயல்படுவது அவசியமாகும்.

கடல் வளமானது பாதுகாக்கப்படும் போதுதான், எமது வருங்கால சந்ததியினரும் கடல் வளத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். தற்போது, கடற்றொழிலுக்கான வசதிவாய்ப்புக்கள் மிகவும் குறைவானதாகவே இருக்கிறது. இக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதாயின், மீனவ சங்கங்களின் செயற்பாட்டுடன், மாவட்ட சமாச அமைப்புக்களின் செயற்பாடும் அடித்தளமாக அமைய வேண்டும். அதனூடாக அரச, அரசசார்பற்ற, நிறுவனங்களின் மூலம் வசதிகளைப் பெற்று கடற்றொழிலாளர்களின் வளர்ச்சிக்கு உதவ முடியும். நமது கடற்றொழில் வருவாயில் ஒரு பகுதியைக் கட்டாயமாகச் சேமிப்பதன் மூலமும் நாம் வளர்ச்சிப் பாதையில் செல்லலாம்.

எனவே, எமது மீன்பிடித்தொழிலை ஒரு பயிற் செய்கையாக மாற்றி, அவற்றின் மூலம் எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஆக்கபூர்வமான வேலைத்திட்டங்களை மேற்கொள் வேண்டும். மற்றும், கடற்றொழில் துறைசார்ந்த, சகல விடயங்கள் அடங்கிய அறிவூட்டலை மேற்கொள்வது முக்கியமான தொன்றாகும். ஆகவே, நாம் அனைவரும் ஒற்றுமையுடன் பொறுப்பார்ந்த மீன்வள விதிகளைக் கடைப்பிடித்தால், நமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அதிக நாட்கள் தேவையில்லை.

நன்றி: பசுமை



## மட்டக்களப்பில் மாபெரும் பொருண்மியப் பொருட்காட்சி

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப்புலிகளின் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் மார்ச் மாதம் இறுதிப்பகுதியில் மாபெரும் பொருண்மியப் பொருட்காட்சி மட்டு நகர் இந்துக் கல்லூரி மண்டபம், மகாஜனக் கல்லூரி மண்டபம் ஆகிய இரு இடங்களிலும் இடம் பெறவுள்ளது.

இப்பொருட்காட்சியின் போ து மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் சகல திணைக்களங்கள், பிரதேச செயலகங்கள், அரச சார் பற்ற நிறுவனங்கள், கிழக்குப் பல் கலைக்கழகம், மற்றும் கொழும்பில் உள்ள பல கம்பனிகளும் கலந்து கொண்டு தமது ஆக்கத் திறன் பாடுகளைக் காட்டவுள்ளனர்.

இப்பொருட்காட்சி சம்பந்தமான மேலதிக தகவல்களைப் பெற விரும்புவோர்: பொருண்மிய மேம்பாட்டு நிறுவன தலைமையகம், கரடியனாறு எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கி.நிஷாம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## மட்டக்களப்பை வறட்சி மாவட்டமாக பிரகடனப்படுத்தி நிவாரணம் வழங்க வேண்டும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வறட்சி தொடர்ந்து நிலவுவதால் மானாவாரி நெற்செய்கை பெரிதும் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளது.

மழையை நம்பி விவசாயச் செய்கையில் ஈடுபட்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு பாரிய நட்டம் ஏற் படும் அபாயம் தோன்றியுள்ளது.

எனவே மட்டக்களப்பு மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக பிரகடனப்படுத்தி சகல மக்களுக்கும் குறிப்பாக மானாவாரி நெற்செய்கையில் ஈடுபட்ட சகலருக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டுமென படுவான்கரைவாழ் மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர். மாவட்ட அரச அதிபர் இதனைக் கருத்தில் கொள்ள வேண்டுமென நாமும் திங்கள் வளம் மூலமாக வேண்டுகின்றோம்.

## பயன் தரும் பழ மருத்துவம்

### வில்வம் பழம்

உடலுக்கு உறுதியும், ஆரோக்கியமும் தரக்கூடிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது வில்வம்பழம். 100கி.வில்வபழத்தில் உயிர்ச்சத்துக்கள் ''சி'', ''பி'' ஆகியவைகள் உள்ளன. கல்சியம் 85மி.கிபொஸ்பரஸ் 50கி. இரும்புச் சத்து 0.7கி. என்னும் அளவில் உள்ளன. தாது உப்புக்கள் தகுந்த அளவில் உள்ள இந்த கனி நல்ல மருந்தைப் போல செயல் புரிகின்றது.

இதில் ஈரப்பதன் சற்று குறைவு (962வீதம்) தான் என்றாலும் மாவு சத்து 32சதவிகிதமும், புரதம் 1.8சதவிகிதமும் உள்ளன. இதன் ஓட்டை உடைத்து விதைகளை நீக்கி சர்க்கரை சேர்த்து சர்பத்போல செய்து குடிக்கலாம். அல்லது பாலுடன் சக்கரை சேர்த்து உண்ணலாம்.

குடலுக்கு நன்மை தரும் இந்தக் கனி சீதபேதியைக் கட்டுப்படுத்தவல்லது. இதன் தாயகம் இந்தியாதான் என்றாலும் தற்போது தாய்லாந்து, பர்மா, பாகிஸ்தான், இலங்கை ஆகிய இடங்களிலும் விளைகிறது.

100கிராம் வில்வக் கனியில் 135கலோரி கிடைக்கிறது. மலச்சிக்கலைத் நீக்கும். வாந்திபேதியைக் கட்டுப்படுத்தும் ஆற்றலும் இதற்கு உண்டு. ஸ்கர்வி என்னும் நோயை குணமாக்கும் இது, பசியை நன்கு தூண்ட வல்லது. சளி - கபம் இவைகளையும் குணப்படுத்தக் கூடிய வில்வக்கனி. வில்வ இலையை நீருடன் சேர்த்து நன்கு கொதிக்க வைத்து மிளகுத் தூள் சேர்த்து அருந்தினால் சளி இருமல் கட்டப்படும். சளியினால் ஏற்படும் மூச்சுத்திணறல் மாறும்.

வில்வ இலையை இரவு முழுவதும் சுத்தமாக காய்ச்சி வடி கட்டிய நீரில் ஊறவைத்து காலையில் அதை வடிகட்டி அருந்த வயிற்றுப் புண் குணமாகும். இதில் அதிகமாக உள்ள டானின், ஜீரண உறுப்புக்களில் ஏற்பட்டுள்ள புண்கள் கட்டிகளையும் அதனால் ஏற்படும் வலியையும் மெல்ல மெல்ல குணப்படுத்தும்.

வில்வக் காயும் கூட மருத்துவக் குணங்கள் நிறைந்தது. பித்த நீரை வெளியேற்றும் தன்மை இதற்கு உண்டு. குடலுக்கும் உடலுக்கும் பலன் தரவல்லது இந்தக் கனி.

# இந்தியா தான் எங்களுக்கு மிகவும் சவாலான எதிரணி

**-கில்கிறிஸ்ட்-**

சொந்த மண்ணில் தான் விளையாடியதிலேயே இந்தியாவுக்கு எதிரான இந்த தொடர்தான் மிகவும் கடினமான தொடர் என்றும் சர்வதேச அளவில் மிகச் சிறந்த மிடில்-ஆர்டர் பேட்டிங் வரிசையை கொண்டதாக இந்தியா இருப்பதாக அவுஸ்திரேலிய அணியின் விக்கெட் கீப்பரான கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கில்கிறிஸ்ட் அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

அவுஸ்திரேலியாவில் நான் விளையாடியுள்ள தொடர்களிலேயே மிகவும் கடினமான தொடர் இதுதான். 2001-ல் நாங்கள் இந்தியாவில் இருந்தபோது அயல் நாடு தொடர்களிலேயே எனது கடினமான தொடர் என்று கூறியிருந்தேன். எனவே சொந்த மண்ணிலும் அயல் நாட்டிலும் இந்தியாதான் எங்களுக்கு மிகவும் சவாலான எதிரணியாகும்.

சர்வதேச அளவில் மிகச்சிறந்த துடுப்பாட்ட வரிசையை கொண்டதாக இந்தியா உள்ளது. ஒரு தொடரில் எல்லா துடுப்பாட்டவீரர்களும் விளாசுவது என்பது அடிக்கடி நடப்பது அல்ல. ஆனால் இந்த தொடரில் இந்திய துடுப்பாட்டவீரர்களும் சிறப்பாக விளையாடி உள்ளனர்.

லக்ஸ்மன் துடுப்பாட்டத்தை பற்றி குறிப்பிட வேண்டும் எனில், எங்களுக்கு எதிராக விளையாடும் போதெல்லாம் அவர் ஏதாவது ஸ்பெஷலான விஷயத்துடன் விளையாடி வருகிறார் என்று கூறியகில்கி றிஸ்ட், 220 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருக்கும் சச்சினுக்கும் தனது பாராட்டுகளை தெரிவித்துக் கொண்டார்.

# சச்சின் ஆட்டமிழக்காமல் 241 ஓட்டங்கள் இந்திய அணி வெற்றி இலக்கை நோக்கி

இந்திய அணியில் சுழல்பந்து வீச்சாளர் அணில் கும்ளேயின் சிறப்பான பந்து வீச்சின் காரணமாக அவுஸ்திரேலியாவுக்கெதிராக சிட்னியில் நடைபெற்று வருகின்ற நான்காவது டெஸ்ட் கிரிக்கட் போட்டியில் இந்திய அணி பலமான நிலையில் உள்ளது. போட்டியின் மூன்றாம் நாளான நேற்று முதல் இன்னிங்சுக்காகத் துடுப்பெடுத்தாடி வருகின்ற அவுஸ்திரேலிய அணி ஆட்டநேர முடிவிற்கு சற்று நேர முன்னர் வரை 5 விக்கட் இழப்பிற்கு 311 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. நேற்றுக் காலை 5 விக்கட் இழப்பிற்கு 600 ஓட்டங்களுடன் முதல் இன்னிங்சைத் தொடர்ந்த இந்திய அணி 7 விக்கற் இழப்பிற்கு 705 ஓட்டங்களைப் பெற்றிருந்த இந்திய அணி ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட அணி ஒன்று ஆகக்கூடியளவுபெற்ற மொத்த ஓட்டம் இதுவாகும். இதில் சச்சின் டெண்டுல்கார் தனது டெஸ்ட் வாழ்வில் ஆகக் கூடுதல் ஓட்டங்களாக 241 ஓட்டங்களைப் ஆட்டமிழக்காமல் பெற்றமை சிறப்பம்சமாகும். அவுஸ்திரேலிய அணி பெற்ற ஓட்டங்களில் ஜெஸ்ரின் லங்கர் 117 ஓட்டங்களையும் மெத்தியூ கெய்டன் 67 ஓட்டங்களையும் பெற்றார்கள். அணில் கும்ளே 4 விக்கட்டுக்களைக் கைப்பற்றினார்.




# பத்து மணி நேரம் விளையாடியும் எவ்வித சோர்வும் ஏற்படவில்லை

**-சச்சின்-**

ஏறக்குறைய 10 மணி நேரம் விளையாடினாலும் உண்மையிலேயே தனக்கு சோர்வு ஏதும் இல்லை என்று சிட்னியில் நடைபெற்று வரும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான 4-வது டெஸ்டில் இரட்டை சதம் அடித்துள்ள இந்திய அணியின் மாஸ்டர் பிளாஸ்டரான சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையே சிட்னியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் 4-வது டெஸ்டில் 220 ஓட்டங்களை எடுத்து சச்சின் களத்தில் உள்ளார்.

ஏறக்குறைய 10 மணி நேரம் விளையாடி பார்முக்கு திரும்பியுள்ளதை சச்சின் வெளிப்படுத்தி இருக்கிறார். நீண்ட நேரம் விளையாடினாலும் தனக்கு சோர்வு ஏதும் இல்லை என்று கூறிய சச்சின், முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளில் 81 ஓட்டங்களை மட்டுமே எடுத்து இருந்தார்.

இந்த நிலையில் நேற்றைய 2-ம் நாள் ஆட்டத்திற்குப் பின்னர் பேட்டியளித்த சச்சின் கூறுகையில், இந்த தொடரில் நான் பெரிய அளவில் பிரகாசிக்க இல்லை. ஓட்டகுவிப்பிலும் ஈடுபடவில்லை. எனவே எனக்கு எந்த சோர்வும் இல்லை. இன்னும் சோர்வடையவும் இல்லை. டெஸ்ட் போட்டிகளில் இந்த வருடமானது எனக்கு சிறப்பானதாக அமையவில்லை. ஆனால் ஒருநாள் போட்டிகளை எடுத்துக்கொண்டால் .... ஓ.கே. துரதிர்ஷ்டவசமாக இந்த தொடரில் என்னால் பிரகாசிக்க முடியாமல் போனது. இந்த டெஸ்டில் நீண்ட நேரம் விளையாட வேண்



டும் என்ற விருப்பத்துடன் களம் இறங்கினேன்.

எந்த ஒரு நிலையிலும் 2-ம் நாள் ஆட்ட நேரம் முழுவதும் ஆட்டமிழக்காமல் விளையாடவேண்டும் என்ற உறுதியுடன் விளையாடினேன். ஆப்-ஸ்டம்பிற்கு வெளியே செல்லும் பந்தை எந்த காரணம் கொண்டும் தொடக்கூடாது என்ற முடிவுடன் விளையாடினேன், அதே சமயம் லெக் சைடில் விளையாடி ஓட்டங்களைக் குவிக்கவேண்டும் என்ற முடிவுடன் விளையாடினேன். என்னுடைய ஆன்-ட்ரைவ் ஷாட்களுக்காக 2-ம் நாள் ஆட்டம் முழுவதும் பொறுமையாக காத்திருந்து விளையாடினேன்.

3-ம் நாள் ஆட்டத்திற்காக ஸ்பெஷல் யுக்திகள் எதையும் இந்தியா முடிவு செய்யவில்லை. ஆனால் விரைவாக ஓட்டங்களைக் குவித்து அதன் பின்பு டிக்ளேர் செய்வோம். நீண்ட நேரம் விளையாடமாட் டோம் என்று சச்சின் கூறினார்.

# தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு கபடிச் சுற்றுப் போட்டி

(இ.வரதராஜன்)

புதுக்குடியிருப்பு டொல்பின் விளையாட்டுக் கழகமானது எதிர் வரும் தைப் பொங்கல் விழாவினை முன்னிட்டு மாபெரும் கபடிச் சுற்றுப் போட்டி ஒன்றினை நடாத்த ஏற்பாடு செய்துள்ளது. இப்போட்டியானது மண்முனைப்பற்று பிரதேசப் பிரிவிற்கு உட்பட்ட விளையாட்டுக் கழகங்கள் மாத்திரம் கலந்து கொள்ளலாம் ஒரு விளையாட்டுக் கழகத்தில் இருந்து எத்தனை அணி வேண்டுமானாலும் பங்குபற்றலாம். ஒரு அணிக்கான அனுமதிக் கட்டணம் 100 ரூபா அறவீடு செய்யப்படும். இப்போட்டியில் கலந்து கொள்ளும் கழகங்கள் எதிர்வரும் 2004.01.13ம் திகதி செவ்வாய் கிழமைக்கு முன் செ.சத்தியதாஸ் (கபடி விளையாட்டுத் தலைவர்) புதுக்குடியிருப்பு-4 மட்டக்களப்பு எனும் முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ கையளிக்கலாம். மேற்படிப்போட்டியில் கலந்து கொள்ளும் விளையாட்டுக் கழகங்கள் அவ்விளையாட்டில் கலந்து கொள்ளும் 11 வீரர்களது பெயர் பட்டியலை தலைவர், செயலாளர் சிபாரிசு செய்து அனுப்பிவைக்கலாம். இப்போட்டியில் 1ம், 2ம் இடங்களினைப் பெறும் அணியினருக்கு பரிசில் பொருட்களும் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.




# கொத்தியாபுலை வீதி புனரமைக்கப்படுமா?

மண்முனை மேற்குப் பிரதேசத்திலுள்ள கொத்தியாபுலை என்னும் கிராமத்தின் பிரதான வீதி பல நீண்ட வருட காலமாக குன்றும், குழியுமாகக் காணப்படுகின்றன.

மணல்பிட்டி பிரதான வீதியிலிருந்து கொத்தியாபுலைக் கிராமத்திற்குச் செல்லும் இவ்வீதி கற்கள் சிதறிய நிலையில் குன்றும், குழியுமாக மழைகாலத்தில் நீர் தேங்கிக் காணப்படுகின்றன. இதனால் பொது மக்களின் போக்குவரத்திற்குப் பெரிதும் பாதிப்புக்கள் தினமும் ஏற்படுகின்றன.

இவ்வீதியில் கொத்தியாபுலை கலைவாணி வித்தியாலயம் அமைந்துள்ளதால் மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தினமும் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் காணப்படுகின்றனர். அத்தோடு பல தடவைகள், விபத்துக்களும் ஏற்படுகின்றன.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கிராமங்களின் அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு செய்கின்றனர். அந்தவகையில் இவ்வீதியையும் கவனத்திற் கொண்டு இதனைப் புனருத்தானம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களை பொதுமக்கள் சார்பாக கேட்டு நிற்கின்றேன்.

*நலன் விரும்பி.*

# பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனிப்பார்களா?

மட்டக்களப்பு மண்முனைப் பற்றுப் பிரதேசப் பிரிவிற்குட்பட்ட பல விளையாட்டுக் கழகங்கள் மண்முனைப் பற்று பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் பதிவு செய்யப்பட்டு செயற்பட்டு வந்தாலும் இவ்விளையாட்டுக் கழகங்களினை ஊக்குவிக்கும் நடவடிக்கையோ அல்லது இவ் விளையாட்டுக் கழகங்களிற்கு உபகரணங்கள் கொடுத்து ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் இப்பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடமோ இம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களிடமோ இல்லை. இவ்வாறு ஊக்குவிப்பு நடவடிக்கைகளானது எந்த தரப்பினரிடம் இருந்தும் இவ்விளையாட்டு கழகங்களிற்கு கிடைக்காமல் போவதினால் இவ்விளையாட்டுக் கழகங்களின் தற்போதைய செயற்பாடு பொழுதினைப் போக்குவதற்கு விளையாடும் விளையாட்டாகவும் மற்றும் ஏனோதானோ எனும் நிலைக்கு இவ்விளையாட்டு கழகங்களின் இன்றைய நிலை போய்க் கொண்டு உள்ளது. எனவே இப்பிரச்சினையினை தீர்க்க எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் கணிசமான அளவு ஒதுக்கீடு செய்ய முன்வர வேண்டும் இதே போன்று எமது மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர்கள், பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர்கள் மட்டக்களப்பு அரச சார்பற்ற நிறுவனங்கள் யாவும் மட்டக்களப்பு இளைஞர்களின் விளையாட்டுத் தரத்தினை உயர்த்த முன்வர வேண்டும்.

*தனஞ்சயன், மண்முனைப்பற்று*

# மணல்பிட்டி பிரதான வீதியில் பஸ் தரிப்பு நிலையங்கள் வேண்டும்.

மட்டக்களப்பிலிருந்து மணல்பிட்டி ஊடாக மகிழடித்தீவுச் சந்தி வரை சென்று திரும்புகின்றது பஸ் வண்டிக்காக பல பிரயாணிகள் கொட்டும் மழையிலும், கோர வெயிலிலும் வீதி ஓரங்களில் மூட்டை முடிச்சுகளுடன் காத்து நிற்கின்றனர். பிரயாணிகளுக்கென்றொரு பஸ் தரிப்பிடங்கள் இவ்வீதியில் இதுவரை காலமும் நிர்மாணிக்கப்படாததையிட்டு மக்கள் பெரிதும் கவலை தெரிவிக்கின்றனர். படுவான்கரைப்பகுதியில் பல விளையாட்டுக்கழகங்கள், சங்கங்கள், கலைக்கழகங்கள், தனியார் அமைப்புக்கள் இருந்தும் கூட இதனை யாரும் கவனிப்பாரில்லை. எனவே 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என உணர்ந்து எமது பகுதியிலுள்ள பணம் படைத்த சங்கங்கள், கழகங்கள் மக்களின் நலனில் அக்கறை செலுத்தி மணல்பிட்டி பிரதான வீதியிலுள்ள மணல்பிட்டிச் சந்தி, கொத்தியாபுலை, மாவடிச்சந்தி, புது மண்டபத்தடி, குறிஞ்சாமுனை ஆகிய இடங்கள் பஸ் தரிப்பு நிலையங்களை நிர்மானிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*பயணிகளில் ஒருவன்*

*அன்புடன் வாசகர்களுக்கு!*

*எமது தாயக மண்ணில் அன்றாடம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உங்கள் பகுதிகளில் செய்ய வேண்டிய அபிவிருத்திகள், புறக்கணிப்புகள், அதிகாரிகளின் ஊழல்கள், மோசடிகள், இன்னும் எத்தனையோ சம்பவங்களை மனதிற்குள் பூட்டி வைக்க வேண்டாம்.*

*தமிழ் அலையில் வெளிக்கொணருங்கள். தமிழ் அலையில் ''அலையின் தேடல்'' பகுதி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற் காகக் காத்திருக்கின்றது. அதன் வாயிலாக வெளிவருவதால் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.*


*எனவே உங்கள் பிரதேசத்தில் நடைபெறும் சம்பவங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள்.*

அனுப்ப வேண்டிய முகவரி
அலையின் தேடல்,
பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.

தமிழ்அலை
Tamilalai
தினசரி



பாகிஸ்தான் இஸ்லாமாபாத்தின் ஜின்னா மண்டபத்தில் நேற்று ஆரம்பமான 12வது சார்க் மாநாட்டில் கலந்து கொண்ட சார்க் நாட்டுத் தலைவர்களை முதலாவது படத்திலும் மற்றும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இந்திய பிரதமர் வாஜ்பாய் ஆகியோர் உரையாற்றுவதை 2ம்,3ம் படங்களில் காணலாம்.



குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகள் தடைப்படும் அபாயம்.

## கஞுவாஞ்சிகுடி டிப்போ ஊழியர்கள் வேலை நிறுத்தம் நியாயமற்றது

### பஸ் கம்பனி தலைவர் வி.இராமநாதன்.

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

மட்டக்களப்பு - கஞுவாஞ்சிகுடி போக்குவரத்து சாலை ஊழியர்களது வேலை நிறுத்தம் நியாயமற்றது என நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனியின் தலைவர் வீ. இராமநாதன் தெரிவித்தார்.

கஞுவாஞ்சிகுடி சாலையில் பணியாளர்களுக்கிடையே ஒற்றுமையின்மையினால் ஏற்பட்டுள்ள நிருவாகச் சீர்கேட்டினையடுத்து சாலை நட்டத்தில் இயங்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்நிலையில் அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களது சம்பளத்தினை வழங்குவதற்கு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள போதிலும் டிசம்பர் மாதத்திற்குரிய சம்பளத்தையும் உரிய திகதிக்கு முன்னதாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினை ஊழியர்கள் முன்வைத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளமை அர்த்தமற்ற செயலென பஸ் கம்பனியின் தலைவர் இராமநாதன் கூறினார்.

தற்போது நவம்பர் மாதத்திற்காக முழுச்சம்பளமும் வழங்க முடியும். ஆனால் டிசம்பர் மாதத்திற்கான சம்பளம் வழக்கம் போன்று எதிர்வரும் எட்டாம் திகதிக்குப் பின்னரே வழங்கப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்கு மேலதிகமாக ஊழியர்கள் முற்பணம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையினையும் முன்வைத்துள்ளனர். நட்டத்தில் இயங்கும் சாலை ஒன்றின் ஊழியர்களுக்கு சம்பள முற்பணம் வழங்கப்படமாட்டாதென்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இதேவேளை ஊழியர்களது நலன் குறித்து அரசியல்வாதிகள் என்னுடன் தொடர்புகொண்டு பேசியதாகத் தெரிவிக்கப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை. அரசியல் ரீதியான மிரட்டல்களுக்கு நான் அடிபணியப் போவதில்லையென பஸ் கம்பனியின் தலைவர் இராமநாதன் வலியுறுத்தினார்.

## கடலில் மிதந்துவந்த இராட்சதமரம் விற்கமுனைந்தவர்கள் பொலிசாரால் கைது!

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு முகத்துவாரக் கடலில் பாரியமரம் ஒன்றினைக் கண்டெடுத்த மீனவர் அதனை விற்பனை செய்வதற்காக கொண்டு வந்தவேளையில் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் முகத்துவாரக் கடலில் பாரிய மரம் ஒன்று மிதந்து வந்ததைக்கண்ட மீனவர்கள் அதனை மீன்பிடி படகின் மூலம் கட்டி இழுத்து கரைக்கு கொண்டு வந்தனர் 50.000 பெறுமதியான இம் மரத்தினை 30.000 ரூபாவுக்கு வர்த்தகர் ஒருவருக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டுவந்த வேளையில் மட்டக்களப்பு பொலிசாரினால் கைது செய்து விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுவருவதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

## வவுனியாவில் வாலிபர் நேற்று சுட்டுக்கொலை

(வவுனியா நிருபர்)

வவுனியா பட்டக்காடு பகுதியில் இளைஞர் ஒருவர் நேற்றுக்காலை இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

அளவெட்டியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் அஜந்தன் (24) எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர் பட்டக்காடு பகுதியில் வாடகை வீடொன்றில் வசித்து வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக வவுனியா சிறிலங்கா பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

**அடி பணிய...**

வேண்டும் என அக்கடிதங்களில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அமெரிக்க செயலர் கொலின் பவல் அனுப்பிய கடிதத்தையடுத்தே பொதுஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் இவ்வாறு பிரதமர் மீது குற்றம் சுமர்த்தியுள்ளனர்.

சார்க் மாநாட்டில் கலந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி நாடு திரும்பியதும் அமெரிக்காவின் கருத்து தொடர்பான உத்தியோக பூர்வ தகவல்கள் வெளியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை கடந்த வாரமும் அமெரிக்கா இருதலைவர்களுக்கும் அறிவுறுத்தல் விடுத்தி

## மண்முனை வடக்கு கிராம உத்தியோகத்தர்களை ஏனைய உத்தியோகத்தர்களும் பின்பற்ற வேண்டும்

### -அரச அதிபர்-

(எம்.யுவராஜ்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை வடக்கு கிராம உத்தி யோகத்தர்களைப் போன்று ஏனைய பிரதேச கிராம சேவை உத்தியோகத்தர்களும் திகழ வேண்டும், ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இவர்கள் ஒரு முன் மாதிரியாக இருக்க வேண்டும். இவ்வாறு நேற்று மண்முனை வடக்கு கிராம உத்தியோகத்தர் நலன்புரி சங்கத்தின் 05வது ஆண்டு வருடாந்த ஒன்றுகூடலில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ.மோனகுருசாமி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:- இந்த ஊழியர்கள் நலன்புரி சங்கம் அமைத்து வருடாந்த ஒன்றுகூடலை நடத்தும் போது இவர்களிடத்தில் ஒற்றுமையும், புரிந்துணர்வும் ஏற்படுகின்றது. இதனால் இவர்களின் ஆளுமையை விருத்தி செய்ய முடியும், இதேபோன்று ஏனைய பிரதேசங்களில் வேலை செய்யும் கிராமசேவை உத்தியோகத்தர்களும் காணப்பட்டால் தமது கடமைகளில் எதுவித பிரச்சினைகளும் ஏற்பட வாய்ப்பு இருக்காது. எமது மாவட்டத்தின் ஏனைய இலாகாக்கள் இவர்களைப் பின் பற்றி நடக்க வேண்டும் என்று கூறினார்.

சங்கத்தின் தலைவர் பா.ஸ்ரீஸ்கந்தஜெயா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அதியுயர் தரத்தில் கிராமசேவை உத்தியோகத்தர்களாகப் பதவி உயர்வு பெற்றுள்ள ப.தேவராசா, பி.பி.குருஸ் ஆகியோரையும், வாழைச்சேனை பிரதேச செயலாளராக இடமாற்றம் பெற்றுள்ள திருமதி க.பத்மராஜாவையும் பாராட்டி கௌரவித்தனர்.

## கஞுவாஞ்சிகுடி டிப்போ ஊழியர் வேலை நிறுத்தத்தால் படுவான்கரை பஸ் போக்குவரத்து பாதிப்பு!

(எம்.யுவராஜ்)

கஞுவாஞ்சிக்குடி நியூஈஸ்ரன் பஸ் கம்பனி டிப்போவில் கடமை புரியும் ஊழியர்களின் வேலை நிறுத்தம் காரணமாக படுவான் கரைப் பகுதியில் பல இடங்களுக்கான பஸ் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இரண்டு மாத காலம் வரை ஊழியர்களுக்கான சம்பளம் வழங்கப் படாமையினால் கஞுவாஞ்சிக்குடி நியூஈஸ்ரன் பஸ் கம்பனி டிப்போ ஊழியர்கள் கடந்த 2ம் திகதியிலிருந்து தங்களது வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் படுவான் கரைப் பகுதிகளான தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை, வக்கியல்லை, பாலையடிவட்டை, பழுகாமம் தும்பங்கேணி போன்ற பகுதிகளுக்கான பஸ்சேவை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் பொதுமக்கள் பெரிதும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே மாவட்டத்திலுள்ள ஏனைய டிப்போக்களிலிருந்து பஸ் வண்டிகளை மேற்படி இடங்களுக்கு அமர்த்துமாறு பொதுமக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுநிற்கின்றனர்.

## திராய்கேணியில் நேற்று சிரமதானம்

(நமதுநிருபர்)

திராய்கேணியில் நேற்று சிரமதான அடிப்படையில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

விடுதலைப்புலிகளின் பிரதேச பொறுப்பாளர் புயல்மறவன் தலைமையில் நடைபெற்ற சிரமதானத்தில் அபிவிருத்திக்குழுவினர் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

யுத்தச் சூழலில் மிகவும் பாதிக்கப்பட்ட இக்கிராமத்தை விடுதலைப்புலிகள் கண்காணிக்கத் தொடங்கியதையடுத்து கிராமத்தில் அபிவிருத்திகள் இடம் பெற்று வருவதாக பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

**சிக்கல்களைத் ....**

கொண்ட ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையிலான பிணக்குகள் எழாவண்ணம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான அரசுக்கு ஆட்சியை கொண்டு நடத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க தயாராகவுள்ளேன். எனினும் ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும், எதிர்க் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணிக்குமிடையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகை சிறு வித்தியாசத்தில் இருப்பதால் பிரச்சினைகள் எழுவதாகவும் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தை ஒழித்தல், பிராந்திய பொருளாதாரம், வறுமை ஒழிப்பு போன்ற நடவடிக்கைகளை பிராந்திய ரீதியில் முன்னெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு சுற்று நிருபம் வெளியாகியது

(ஏறாவூர் நிருபர் ஐ.எல்.றூமி)

இவ்வாண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு அறிவிக்கப்பட்ட ஆயிரத்து இருநூற்றைம்பது ரூபாவுக்கு குறையாத சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக சுற்று நிருபம் பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர் ஒருவரது சம்பளத் தொகையின் பத்து வீதம் அல்லது ஆயிரத்து இருநூற்றைம்பது ரூபா இதில் அதிகமான தொகையொன்றை ஜனவரி மாதம் முதல் பெற்றுக்கொள்ள முடியுமென அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொது நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளரினால் சகல அரச திணைக்களத் தலைவர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் சிற்றூழியர் ஒருவரது வருடாந்த சராசரி சம்பளம் 40,800 ரூபாவிலிருந்து 55.,800 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 36.76 வீத அதிகரிப்பாகும்.

இணைந்த சேவை அலுவலர்கள் வருடாந்தம் பெறும் சராசரி சம்பளம் 47,880 ரூபாவிலிருந்து 62,880 ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 31.32 வீதம் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஏனைய அரச சேவைகளைச் சேர்ந்தவர்களது வருடாந்த சம்பளம் 97500 ரூபாவிலிருந்து ஒரு லட்சத்து 15,500 வரை உயர்த்தப்பட்டுள்ளது. இது 15.38 வீத அதிகரிப்பு என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் இணைந்த படி என்பனவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் காங்கிரஸ் தலைவராக வினாயகமூர்த்தி தெரிவு

(நமது நிருபர்)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவராக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை வினாயகமூர்த்தி மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள காங்கிரஸ் இல்லத்தில் நேற்று நடைபெற்ற பொதுச் சபை வருடாந்தக் கூட்டத்தின் போதே இவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் எனக் கட்சியின் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ள கலாநிதி நா.குமரகுருபரன் தெரிவித்தார்.

**கஞுவாஞ்சிகுடி...**

த்தனர்.

நவம்பர் மாதத்திற்கான வேதனத்தை இன்று திங்கட்கிழமையும், டிசம்பர் மாதத்திற்கான சம்பளத்தினை எதிர்வரும் 8ம் திகதியும் வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து ஊழியர்கள் போராட்டத்தை கைவிட்டனர். இதேவேளை சாலை முகாமையாளரை இடமாற்றுவதாகவும்இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இப் பத்திரிகை நித்தி பதிப்பகத்தில் 05.01.2004 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.